# புதிய தேடல்

PUTHIYA THEDAL

ஜூலை 2024
ஜூன்- ஜூலை 2024
July - 2024
June - July 2024

தனிப்பிரதி ₹ 10
ஆண்டு சந்தா ₹ 130

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்



## நட்பு நலமாக... வாழ்வு மகிழ்வாக...



குழித்துறை மறைமாவட்ட
புதிய தேடல் மலர் சிறக்க
நல்வாழ்த்துகள்
தூய கபிரியேல்
அதிதூதர் ஆலயம்,
திக்குறிச்சி.
பங்கு அருள்பணியாளர்,
பங்கு அருள்பணிப்பேரவை,
பங்கு இறைமக்கள்,
தூய கபிரியேல் அகல் அரங்கம்
தூயகபிரியேல் அகல் அரங்கம்
குறைந்த செலவில்
நவின வசதியுடன்
திருமணம் மற்றும்
குடும்ப, சமூக
நிகழ்வுகள்
நடத்த அணுகவும்

**உன்னை நம்பியவருக்கு உயிராய் இரு**
**உன்னை நேசிப்பவருக்கு வாழ்வாய் இரு**
**அன்பாயிரு... நட்பாயிரு... அங்கே மகிழ்வாயிரு...**

**புதிய தேடல்**
*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

**ஆசிரியர்**

அருள்பணி. முனைவர். இரா. பால் ரிச்சார்டு ஜோசப்

**ஆசிரியர் குழு**

அருள்பணி. ஜா.ஜாண் ஜிஜோ (துணைத்தலைவர்)
அருள்பணி. பெ. வெலிங்டன் (செயலர்)
திரு. மு. அருளப்பன் (துணை செயலர்)
அருள்பணி. பி. ஜோஸ் பிரசாந்த் (பொருளர்)
அருள்பணி.முனைவர். எ. ஒய்சிலின் சேவியர்
அருள்பணி. க. சுனில்
திரு. ஞா. எலியாசு
திருமதி. டி. மேரி விஜிலா

**தொடர்பு முகவரி**

புதிய தேடல்
ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை,
மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண் : 1
அஞ்சல் எண் – 629 179
கைபேசி : 9443693504.
மின் அஞ்சல் : *newputhiathedal@gmail.com*

**ஆண்டு சந்தா : ₹ 130**
**ஆயுள் சந்தா : ₹ 2000**
**தனிப்பிரதி : ₹ 10**

**விளம்பரக் கட்டணம்**

பலவண்ண அட்டை உள்பக்கம் : ₹ 7000
பலவண்ண அட்டை வெளிப்பக்கம்: ₹ 12000
முழுப்பக்கம் கறுப்பு / வெள்ளை : ₹ 2000
அரைப்பக்கம் கறுப்பு / வெள்ளை : ₹ 1000

**கனி 07 அகல் 15 ஜூலை 2024**

*உள்ளே உள்ளவை......... பக்கம்*

1. ஆசிரியரின் அன்பு வரிகள் 4
2. திருவிவிலியம் நமக்கு உற்ற துணை, நம் நண்பர் 5
3. திருவிவிலியத்தில் நட்பு 7
4. புனித தேவசகாயத்திற்கு கிடைத்த நலமான நட்பும் மகிழ்வான வாழ்வும் 9
5. ஆனந்த வாழ்வின் ஆதாரம் 11
6. இந்தியராகிய நாம் 15
7. நலமான தோழமையும் போதையில்லா வாழ்வும் 16
8. தேன்சிட்டுப் பதில்கள் 18
9. மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செல்லுமா? செல்லாதா? 19
10. கற்போம் அன்பின் இறையியல் 20
11. புற்றுநோய்... சங்தேகப்படுவோம் 23
12. திசை மாறியப் பயணம் 24
13. நட்பும் மகிழ்வும் நல்கும் திருப்பலி 25
13. இன்றைய காலநிலை மாற்றம் 26
14. நல்ல நட்பு நல்ல மனித வாழ்வின் முன்னோடி 27
15. பணிக்குழுக்களின் அறிக்கை 28
16. அருள்தந்தையர்களின் பணி நியமனம் 30
17. ஆயரின் அலுவல்கள் 34

## ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்பணி. முனைவர்.
இரா. பால் ரிச்சார்டு ஜோசப்



புதிய தேடலின் அன்பு நெஞ்சங்களே!
உங்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

ஜூன், ஜூலை மாதம் என்றாலே பள்ளிக்கூடம், கல்லூரி, மாணாக்கர் சேர்க்கை, படிப்பு என்று கல்வி கண்ணிற்காய் தீவிரமாக செயல்படும் இந்நேரத்தில் அறிவொளிச்சுடராய் உங்கள் முன் உலா வருகிறது புதிய தேடல் என்னும் கலங்கரை தீபம்.

அச்சு ஊடகம் நலிந்து, காட்சி ஊடகம் வளம் அடைந்து வலுப்பெறும் இந்த காலச் சூழலில் எடுத்துப் படிக்க பொறுமை இழந்து நிற்கும் மனநிலையில் இருக்கும் மக்களுக்கு பொறுப்போடு சிந்தித்து செயல்பட ஒரு வாய்ப்பாய் புதிய தேடல் உங்கள் கரங்களில்.

*முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*
*அகநக நட்பது நட்பு*–என்று நட்புப் பற்றி தெய்வப்புலவர் திருவள்ளுவர் ஆழமான அர்த்தமுள்ள வரிகளை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கற்றுத் தந்துள்ளார்.

நல்ல நட்பு தவறை சுட்டிக்காட்டும், நம்பிக்கையை வளர்க்கும், இக்கட்டான தருணங்களில் உடனிருக்கும், எதிர் பார்ப்பின்றி பயணிக்கும், மாண்புடன் நடத்தும், அன்பால் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும், தன் தரத்தை உயர்த்தி உடன் பயணிப்போரின் தரத்தையும் உயர்த்தும், நேர்மறையாக வாழ்க்கையை எதிர் கொள்ளும், இனிய சொற்களால் மனதை ஆளும்.

மேற்கூறிய பண்பும் நடத்தையும் நம் வாழ்வின் நிகழ்வானால் வாழ்வே மகிழ்வாகும். உன் நண்பனை காட்டு; நீ யார் என்று சமூகம் தெரிந்து கொள்ளும். இதுவே நட்புக்கு சிறந்த இலக்கணம். நல்லவை நினைக்க, நல்லதை செய்ய, மகிழ்வாய் வாழ நல்ல நட்பினை நம் வசப்படுத்திக் கொள்ள இம்மாத இதழ் நம் யாவருக்கும் பெருந்துணை ஆற்றும் என ஆழமாய் நம்புகிறேன். நட்பு வட்டத்தில் நல்ல நூல்களை நட்பாக்கிக் கொள்ள புதிய தேடல் உங்கள் ஒத்துழைப்போடு வழிகாட்டி துணைநிற்கும் என உறுதிபட நம்புகிறேன்.

புதிய தேடல் புதுப் பொலிவோடு வெளிவர எம் குழு எடுக்கும் முயற்சிகளோடு உங்கள் உளமார்ந்த ஆதரவும் பங்களிப்பும் எங்களுக்கு அவசியம் தேவை.

வலைத்தளங்களில் வரும் செய்தியை நம்பி வாழ்கிறது இன்றைய தலைமுறை. ஆனால் அதில் வரும் எல்லா செய்திகளும் முழு நம்பகத்தன்மை உடையவை அல்ல. ஊடக அறம் விலை பேசப்படுகிறது. இவை நாம் சந்திக்கும் சமகால சிக்கல்.

நம் தமிழ் சமூகம் சமூக சிந்தனையும், அறநெறி பண்பையும், அர்ப்பண உணர்வும் கொண்ட சமூகம். அந்நிலை தேய்ந்து மாய்ந்திடாமல் இருக்க இலக்கியம் பெரும் பங்கு வகிக்கிறது. ஆகவே, வாசிக்கும் பழக்கம் நம்மிடையே உருவாகிட வேண்டும்.

இத்தருணத்தில் உங்களுக்காக புதிய பார்வையோடு புதிய தேடல் தன்னை தயாரிக்கிறது. இது புதுமைக்கான குரல், புத்துலகம் படைப்பதற்கான அறைகூவல், புதிய தடம் பதிக்க, இணைந்து பயணிக்க, புதிய தேடலோடு புதிய பயணம் தொடர்வோம்...

# 2. திருவிவிலியம் நமக்கு உற்ற துணை, நம் நண்பர்



அருள்பணி. முனைவர். வ. இரபேல்

திருவிவிலியம் என்பதற்கான நேரடி மூலச் சொல் திருவிவிலியத்தில் இல்லை. இதற்கான கிரேக்க மூலச்சொல் நூல் என்னும் பொருளையே கொண்டுள்ளது. ஒருகாலத்தில் இச்சொல் எந்தவொரு நூலையும் குறித்து நின்றது. இப்போது, அதனைத் திருவிவிலியம் என்னும் ஒரு நூலுக்கே பயன்படுத்துகிறோம். திருவிவிலியம் என்பது, இறைவெளிப்பாடு கொண்ட நூலாகக் கிறிஸ்தவத் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு மறை நூல்களாகும்.

கத்தோலிக்கத் திருச்சபை ஏற்றுக் கொண்டுள்ளபடி, பழைய ஏற்பாட்டில் 46 நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 நூல்களுமாக மொத்தம் 73 நூல்கள் திருவிவிலியத்தில் உள்ளன. இதை ஒரு நூலகம் எனவும் அழைக்கலாம். ஏற்பாடு என்பது உடன்படிக்கையைக் குறிப்பிடும் சொல்லாகும். திருவிவிலியத்தை உருவாக்க 1400 ஆண்டுகள் பிடித்தன. கி.பி.100 வாக்கில் முடிவுற்ற திருவிவிலியம் எபிரேயம், அரமேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளில் உருவானதாகும். மிகவும் பிந்திய காலத்தில்தான் அதிகார வசனங்களாகத் திருவிவிலியப் பகுதிகள் பிரிக்கப்பட்டன.

**சில அடிப்படை உண்மைகள்**

**1. தூண்டுதல் பெற்ற எழுத்தோவியம் :** திருவிவிலியத்தின் நூல்கள் கடவுளின் தூண்டுதல் பெற்றவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. (2திமொ. 3:16,17 - மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது). இதற்கான கிரேக்கச் சொல் மூச்சை ஊதுதல் என்பதைச் சுட்டும். தொடக்கத்தில் கடவுள் மனிதனின் நாசிகளில் உயிர்மூச்சை ஊத, அவன் உயிர் உள்ளவன் ஆனான் (தொ.நூ. 2:8). அதுபோல், கடவுள் திருவிவிலியத்தில் தம் உயிர்மூச்சை ஊதியுள்ளார். திருவிவிலியம் அம்மூச்சை வெளியே விடுகிறது. திருவிவிலியம் நம் ஆவியில் வாழ்வை ஊதுகிறது. நம் ஆன்மாவில் அன்பை ஊதுகிறது. நம் மனத்தில் புரிதலை ஊதுகிறது. நம் விருப்பத்தில் தீர்மானத்தை ஊதுகிறது. நம் இதயத்தில் அருளை ஊதுகிறது. நம் வாழ்வில் அழகை ஊதுகிறது. நம் இருப்பில் இயைபுத் தன்மையை ஊதுகிறது.

**2. தூண்டுதல் தருபவர் :** தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்ற மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்கு (2பேதுரு 1:21). தூய ஆவியாரே திருவிவிலியத்தின் ஆசிரியரும் விளக்கமளிப்பவரும் ஆவார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பெற்றவர்கள் மனிதர்கள். ஆனால் அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்லர். அவர்கள் கடவுள் மனிதர்கள். அவர்கள் புனிதர்களும் கூட. அவர்கள் கடவுளுடன் அன்புறவில் இருந்தார்கள். ஆட்கொள்ளப்பெறுதல் என்பது இங்கே புதிதாய்ப் பிறத்தலைக் குறிக்கிறது. எனவே, அவர்கள் எழுதிய திருவிவிலியம் மற்றவர்கள் எழுதும் நூல்களினின்று வேறுபட்டு நிற்கிறது.

**3. திருவிவிலிய வெளிபாட்டின் நோக்கம் :** கிறிஸ்துவே இதனைக் கூறுகிறார். மறைநூலும் எனக்குச் சான்று பகர்கிறது (யோவா. 5:39). கிறிஸ்து விளக்கின் ஒளி, நமக்கு வழிகாட்டுகிறார். அவர் மரத்தின் வாழ்வு-அது வளர்வதற்காக, அவர் கோவிலில் இருக்கும் மாட்சி-அதை அழகுபடுத்துவதற்காக, அவர் உடலில் இருக்கும் இதயம்-அதை வாழவைப்பதற்காக.

பழைய ஏற்பாட்டின் பல மாந்தர்கள் கிறிஸ்துவுக்கு மாதிரிகள். கிறிஸ்து இறுதி ஆதாம். அவரே காணிக்கை செலுத்திய ஆபேல். அவரே நம்பிக்கை கொண்ட ஆபிரகாம். அவரே அமைதியான ஈசாக்கு. அவரே வேலை செய்த யாக்கோபு. அவரே மக்களுக்கு உணவளித்த யோசேப்பு. அவரே மக்களை வழிநடத்திய மோசே. அவரே குருவான ஆரோன். அவரே போர்வீரரான யோசுவா. அவரே வீரமுடன் வெற்றி கண்ட தாவீது. அவரே மக்களுக்குப் போதித்த ஞானமுள்ள சாலமோன். அவரே மீட்பளிக்கும் முறை உறவினர் (காண்க ரூத்). பாஸ்கா, எரிபலி, பாவம்போக்கும் பலி, நல்லுறவுக் காணிக்கை ஆகிய யாவும் அவரே.

இவ்வாறு மறைநூல் அனைத்தும் கிறிஸ்துவில் பொதிந்துள்ளன. அவரே அனைத்து மறைநூலையும்

கொண்டிருப்பவர். கிறிஸ்துவே பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் இணைப்பவராக உள்ளார். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டுமே கிறிஸ்துவைத்தான் அறிவிக்கின்றன. அவரே இரண்டுக்கும் ஒன்றிப்பைத் தருகிறார். கிறிஸ்துவை மையமாகக் கொண்டே பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் நாம் வாசிக்க வேண்டும்.

**4. திருவிவிலியத்தின் இரண்டு அடிப்படைக் கருப்பொருட்கள் :** இக்கருப்பொருட்களைக் கிறிஸ்துவே எம்மாவு சென்ற இரு சீடர்களுக்கும், மேல்மாடியில் கூடியிருந்த பதினொரு சீடர்களுக்கும் தெரிவித்தார் (லூக். 24:27-36).

கிறிஸ்துவின் துன்பங்களும் மாட்சியும் கடவுளின் இரண்டு இணைவுக் கருவிகளாகும். அவை எல்லாவற்றையும் இணைக்கின்றன. கல்வாரியும், ஒலிவமலையும் இரண்டு காட்சிக் கோணங்கள் ஆகும். சிலுவையும் மணிமுடியும் வெளிப்பாட்டின் ஆல்பாவும் ஓமேகாவும் ஆட்டுக்குட்டியும் அரியணையும் கடவுளின் நோக்கத்திற்கான நெம்புகோல்களாகும். பாஸ்காவும் ஆட்டுக்குட்டியும் தொடக்க நிலையும், இலக்கு நிலையும் ஆகும். பீடமும் கூடாரமும் எல்லாவற்றிற்கும் தொடக்க நூலும் திருவெளிப் பாடும் ஆகும்.

**5. திருவிவிலியம் நமக்கு வழங்குபவை :** திருவிவிலியம் பலவற்றுடன் ஒப்புமைப்படுத்தப் பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று வித்து ஆகும். நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல மாறாக, உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப் பிறப்பு அடைந்துள்ளீர்கள் (1 பேது. 1:23). வித்து வாழ்வைக் கொண்டுள்ளது. அது மேலும் வித்துக்களை உருவாக்குகிறது. எழுதப்பட்ட வார்த்தையால் உயிருள்ள வார்த்தையின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. எழுதப்பட்ட வார்த்தையின் வழியாக உயிருள்ள வார்த்தை மனித ஆன்மாவில் செயலாற்றும்போது, வார்த்தையின் பண்புதான் மீண்டும் உருவாக்கப்படுகிறது. இது புனிதப்படுத்துவதற்கான தூய வார்த்தை. இது நம்மைக் கடவுளுடன் ஏற்புடையோர் ஆக்குவதற்கான நீதியின் வார்த்தை. இது கனி தருவதற்கான உயிருள்ள வார்த்தை. இது நமக்கு அறிவூட்டும் ஞான வார்த்தை. இது நமக்கு அமைதி அருளும் அமைதியின் வார்த்தை. இது நமக்குள் மின்சாரமாகப் பாயும் வல்லமையுள்ள வார்த்தை. இது நம்மை ஆழப்படுத்த வரும் அன்பின் வார்த்தை.

**6. திருவிவிலியம் நம்மில் ஆற்றும் செயல்கள்:** திருவிவிலியம் நம்மில் ஆற்றாத செயல்களே இல்லை எனலாம். ஒருவர் திருவிவிலியம் குறித்து அழகாகச் சொல்லியுள்ளார். நான் உன்னை வாசிக்கும் ஒவ்வொரு மணித்துளியும் ஒரு பாவத்தை நீ கொல்கிறாய் அல்லது அதை எதிர்த்துப் போராட ஒரு நற்பண்பை என்னுள் வரவிடுகிறாய்.

திருவிவிலியம் ஆற்றும் பல செயல்கள் பின்வருமாறு. நற்செய்தியுடன் நம்மை பழக்குகிறது (1 கொரி. 15:3). 4 மறைநூல்களில் எழுதியுள்ளவாறு, கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் எழுப்பப்பட்டார். அலகைக்கு எதிராக இறைவார்த்தையை பயன் படுத்தும்போது, அது அலகையை வெல்கிறது (மத். 4:4,7,10).

நம் வாழ்க்கைப் பாதைக்கு விளக்காக உள்ளது (தி.பா. 199:105). கிறிஸ்துவின் அன்பில் நாம் நிலைத்திருக்க நமக்கு உதவி செய்கிறது (யோவா. 15:10). நம் மனத்தைத் தூய்மைப் படுத்துகிறது (2 கொரி. 7:1) கடவுளின் இல்லன்தின் மீதுள்ள ஆர்வத்தினால் நம்மை எரிக்கிறது (தி.பா 60:9, யோவா 2:17).

**7. திருவிவிலியம் நமக்கு உற்ற துணை, நம் நண்பர் :** புனித அகுஸ்தீன் கூறினார், கடவுள் நமக்குத் திருவிவிலியத்தைக் கொடுத்தது விண்ணகம் எவ்வாறு உள்ளது என்பதைக் கற்பிப்பதற்காக அன்று. மாறாக, நாம் எவ்வாறு விண்ணகம் செல்ல வேண்டும் என்பதைக் கற்பிப்பதற்காகவே. ஆக, நம் விண்ணகப் பயணத்தில் திருவிவிலியம் சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறது.

புனித அகுஸ்தீன் உரோமையர் திருமுகம் 13:11-14 பகுதியை வாசித்ததனாலேயே மனந்திரும்பினார். ஒரு பூங்காவில் இருக்கையில், எடுத்து வாசி என்னும் சிறுவன் ஒருவனின் குரலைக் கடவுளின் குரலாக எடுத்துக்கொண்டு, மேற்கண்ட பகுதியை வாசித்ததால் புதிய அகுஸ்தீனாக மாறினான். திருவிவிலியம் நம் தவறுகளை, நமக்கே தெரியாமலிருக்கும் பாவங்களை நமக்கு உணர்த்தி, நம்மை மனந்திரும்ப வைக்கும் உற்ற துணையாக, நம் நண்பராக உள்ளது.

மகாத்மா காந்தி சத்திய சோதனை நூலில் எழுதுகிறார், புதிய ஏற்பாட்டைப் படித்தபோது எனக்கு முற்றிலும் மாறான உணர்ச்சி ஏற்பட்டது. மிகமுக்கியமாக, மலைப்பொழிவு நேரடியாகவே என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. காந்தியின் தனிவாழ்வுக்கும், அகிம்சை முறையிலான விடுதலைப் போராட்ட வாழ்வுக்கும் உற்ற துணையாக, வழிகாட்டியாக விளங்கியது திருவிவிலியமே.

கிறிஸ்துவில் விடுதலை பெற்ற நமக்கும், அவரில் முழு விடுதலை பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் திருவிவிலியம் உற்ற துணையாக, நண்பராக, வழிகாட்டியாக இலங்குகிறது.

# 3. திருவிவிலியத்தில் நட்பு



அருள்பணி. S. இயேசு ரெத்தினம்
அதிபர், புலியூர்குறிச்சி.

நட்பு இறைவன் கொடுத்த மாபெரும் கொடை. நட்பு புனிதமான மனித உறவாகும். திருவிவிலியத்தில் ஞான நூல்களின் ஆசிரியர்கள் நட்பை எவ்வாறு மதிப்பது, பேணுவது என்பது பற்றி எடுத்துரைத்துள்ளார்கள். சீராக் நூலில் நட்பைப்பற்றி மிக அருமையான கருத்துகள் சொல்லப்பட்டுள்ளது. அனைவரோடும் நட்புடன் பழகு, ஆனால் ஆயிரத்தில் ஒருவரே உனக்கு ஆலோசகராக இருக்கட்டும். ஆய்ந்து நட்புகொள், நண்பரையும் விரைவில் நம்பி விடாதே, தன்னலம் தேடும் நண்பர்களும் உண்டு. அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள். பகைவர்களாய் மாறும் நண்பர்களும் உண்டு. நீ நல்ல நிலையில் இருக்கும்போது உனக்கு உயிருக்கு உயிரான அன்பர்களாய் இருப்பார்கள். நீ தாழ்ந்துவிட்டால் உனக்கு எதிராய் மாறுவார்கள் (சீராக் 6:5-14).

நட்புக்கு மிகச்சிறந்த உதாரணமாக தாவீது யோனத்தான் உறவு அடையாளப்படுத்தப் படுகின்றது. யோனத்தான் தன்னை அன்பு செய்ததைப்போன்று தாவீது அன்பு செய்தார். யோனத்தானின் உள்ளம் தாவீதின் உள்ளத்தோடு ஒன்றுபட்டது. யோனத்தான் அவரைத் தம் உயிரெனக் கருதி அவர்மீது அன்பு கொண்டிருந்தார் (1 சாமு. 18:1). யோனத்தான் தாவீதுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். யோனத்தான் தாம் அணிந்திருந்த மேலங்கியைக் கழற்றித் தாவீதுக்குக் கொடுத்தார். அத்துடன் தம் அங்கி, வாள், வில், கச்சை ஆகியவற்றையும் கொடுத்தார். சவுல், தாவீதைக் கொல்லத் தேடிய போது யோனத்தான் தாவீதுக்கு உதவி செய்தார். அவரைக் காப்பாற்றுவதற்கு எல்லா விதத்திலும் முயற்சி செய்தார். அதேபோன்று யோனத்தானும் சவுலும் பெலிஸ்தியர்களுக்கு எதிரான போரில் இறந்தபோது தாவீது அதிகம் கவலைப்பட்டு துக்கம் கொண்டாடினார்.

புதிய ஏற்பாட்டில் இயேசு தன்னுடைய சீடர்களை நண்பர்கள் என்று அழைத்தார். நான் உங்களை பணியாளர் என்று சொல்லமாட்டேன், என் நண்பர்கள் என்றேன் (யோவான் 15:15). இயேசுவோடு நெருங்கிப் பழகியவர்களையும் நண்பர்கள் என்று அழைத்தார். பாவிகள், ஒன்றுமில்லாதவர்கள், வறுமையில் உழல் பவர்களையும் தன்னுடைய நண்பர்கள் என்றார். கைம்பெண்கள் மற்றும் இயேசுவைப் பின்சென்ற பெண்களையும் தன்னுடைய நண்பர்களாக ஏற்றுக்கொண்டார். இயேசுவின் உடனிருப்பின் வழியாகவும் இவர்களோடு சேர்ந்து உணவருந்துவதன் வழியாகவும் தன்னுடைய நட்பை வெளிக்காட்டினார். இயேசு இலாசரை நண்பர் என்று அழைத்தார் (யோவான் 11:1-16). உச்சக்கட்டமாக நட்பைப்பற்றி இயேசு தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா. 15:13) என்றுகூறி நமது விடுதலை வாழ்விற்காக கல்வாரியில் தன் வாழ்வையே பலியாக்கினார். இயேசுவின் தியாகப்பலி நட்புறவின் சான்றாக அமைந்துள்ளது.

திருத்தந்தை 16-ஆம் பெனடிக்ட் அவர்களின் முதல் சுற்றுமடல் அன்பே கடவுள் **DEUS CARITHAS EST** அன்பைப்பற்றி மிகவும் விவரிக்கிறது. இச்சுற்று மடலின் முதல் பகுதியில் அன்பு என்ற வார்த்தையின் சொற்பொருள் விளக்கத்தைக் கூறுகிறார். அன்பு என்ற வார்த்தைக்குப் பல அர்த்தங்களைக்

கொண்டிருந்தாலும் மூன்று விதமான அன்பைச் சுட்டிக்காட்டுகிறார். 1. காதல் அன்பு **(Eros)**, 2. நட்பு **(Philia)**, 3. தியாக அன்பு **(Agape)**. நட்பு, தியாக அன்பு சுய நலத்தைக் கடந்த பிறரை உண்மையிலேயே கண்டுபிடிக்கும். அன்பு அனுபவத்தை வெளிப்படுத்துகிறது. அன்பு என்பது இங்கு மற்றவர்கள் மீதான அக்கறையையும் நலனையும் குறிப்பதாக மாறுகிறது. அன்பு என்பது சுயநலத்தை நாடுவதோ சுய மகிழ்ச்சிப் போதையில் மூழ்குவதோ அல்லாமல் தன்னல மறுப்பிற்கும் ஏன் தன்னையே தியாகம் செய்வதற்கும் தயாராகிறது. இறுதிவரையும் நண்பர்களுடன் உடனிருக்கும் நிலையை உருவாக்குகிறது.

திருவள்ளுவர் நட்பின் உயர்ந்த தன்மை பற்றி அழகாக சொல்கிறார்.

***உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு***

நண்பனுக்கு இடையூறு ஏற்பட்டபோது அவன் கேளாமலே வலிய சென்று அவனது இடரைப் போக்கி, உதவி செய்ய வேண்டும். ஆடை நழுவியதும் கைகள் உடனே விரைந்து சென்று காப்பதுபோல நண்பனுக்கு துன்பம் வந்தபோது உடனே விரைந்து சென்று உதவ வேண்டும்.

நண்பர்கள் உண்மையான நண்பர்கள் என்றும் உண்மைத்தன்மை இல்லாத நண்பர்கள் என்றும் இருப்பார்கள். உண்மை நண்பர்கள் நட்பிற்கு நல்லிணக்கம் தரும் தோழர்கள். ஒரு நண்பன் நமக்கு எப்போதும் இனிப்புமிகு சொற்களைச் சொல்லிக்கோண்டே இருப்பது இல்லை. தேவையான நேரத்தில் அவன் நம்மைக் கடிந்து கொள்கிறான். நண்பர் கொடுக்கும் அடிகள் நல்நோக்கம் கொண்டவை என்று நீதிமொழிகள் நூல் 27:6 சொல்கிறது. தீமைக்குத் துணைபோகத் தூண்டும் நட்பு சரியான நட்பு அல்ல. மாறாக நம்மை நல்ல ஒரு வாழ்விற்கு அழைத்துச் செல்லும். உறுதுணையாக இருப்பவனே நல்ல நண்பன். தோள் கொடுப்பான் தோழன், அதனோடு அவன் வாழ்வின் சிகரம் அடைய தன் தோளினை ஏணியாகவும் கொடுப்பான். நண்பர்கள் உள்ளத்தால் உடன் இருக்கிறார்கள். துன்பத்தில் எப்போதும் உதவிக்கரம் நீட்டுகிறார்கள். இவ்வுலகில் பணம், செல்வம், புகழ் ஆகியவற்றை சம்பாதிப்பதைவிடவும் நல்ல நண்பர்களை சம்பாதிப்போம். இயேசு என்றும் நம் நண்பர். அவரோடு உடனிருந்து அன்பு பணிகளைச் செய்வோம்.

**நட்பு என்பது நிலைத்து நிற்கும் உயர் வானம் போன்றது**
**நட்பு என்பது கண்ணோடு இருக்கும் கருவிழி போன்றது**
**நலமான நட்பு என்பது ஆழ்கடல் தரும் ஆனந்த முத்தாகும்**
**தட்டிக் கொடுக்க நண்பன் இருந்தால்**
**வேதனை கூட சாதனை ஆகும்**
**பல நேரங்களில் விட்டுக் கொடுப்பது மட்டுமல்ல,**
**சில நேரங்களில் தட்டிக்கொடுப்பதும் நட்புதான்**



# 4. புனிதர் தேவசகாயத்திற்கு கிடைத்த நலமான நட்பும் மகிழ்வான வாழ்வும்

திரு. ஓலக்கோடு ஜான்

அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கின்றான். அருமையான இந்தப் பாடல் வரிகள் அன்பின் மகத்துவத்தை இந்த மனித குலத்திற்கே எடுத்துரைக்கிறது. இயேசுவின் அன்பு ஒன்றுதான் நம் அனைவரையும் கிறிஸ்தவ மறை மூலம் நம்மை இணைத்துள்ளது. அன்னை மரியாள் மீது இறைவன் கொண்டிருந்த பேரன்பு அவரை உலகில் வாழ்ந்த எல்லாப் பெண்களிலும், மேன்மைப் பெற்றவராக உலகிற்கு எடுத்துரைக்கின்றது.

நம் தமிழ் மண் ஈன்ற முதல் புனிதர், இந்தியாவின் முதல் பொதுநிலையினர் புனிதர் என கொண்டாடப்படும் புனிதர் தேவசகாயம் அவர்களும் இறைவனால் அன்பு செய்யப்பட்டு தேர்ந்துக் கொள்ளப்பட்டதாலேயே புனிதராக நம்மில் அருள் பாலிக்க முடிகின்றது. இறைவன் அவருக்கு வழங்கிய மாபெரும் கொடை இது.

நம் புனிதர் தேவசகாயம் அவர்கள் தன் இளமைப் பருவத்தில் நீலகண்டன் என பெயர் பெற்றவராக பரைக்கோடு கரைகண்ட முத்தப்பரின் குருகுலப் பள்ளியிலே ஒரு சாதாரணமானவராக காலடி எடுத்து வைத்தவர். அவரது பள்ளி நண்பர்களான மரிய மில்லன் மாயக்குட்டி, தொம்மை சின்னத்தம்பி அண்ணாவி, தொம்மந் திருமுத்து, குருகுல தலைவர், ஆசிரியர், சக மாணவர் என அனைவருமே கத்தோலிக்க கிறிஸ்தவ அருட்சாதனங்களைப் பெற்றவர்கள் தான். கிறிஸ்தவ மாண்பும் அவர்களது நற்பண்புகளும் நீலகண்டனை தொடாமல் இல்லை. ஆனால் கிறிஸ்தவ மறையில் சேர அவர் சிந்தித்ததே இல்லை. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்கிய நீலகண்டன் பின்னாளில் மன்னன் மார்த்தாண்ட வர்மாவின் நிர்வாகத்தில் உயரிய பொறுப்புக்கு நியமிக்கப் படுகிறார். அவர் துள்ளி விளையாடும் பள்ளிப் பருவத்தில் சக நல்ல மாணவர்கள் மூலம் கிடைத்த நற்பண்புகள் ஒரு நேர்மையான, திறமையான அதிகாரிக்குரிய மனநிலையைத் தருகிறது. இதை ஓர் நலமான நட்பு என்று சொல்லலாம். இதைவிட நலமான நட்பு என நாம் சிந்திக்கும்போது தளபதி இஸ்தாக்கியுஸ் பெனடிக்ட் டிலனாயின் நட்பு. இது அவரை மகிழ்வான இறைவாழ்வுக்கு அழைத்துச் செல்கிறது. 1741-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20-ஆம் நாள் முதல் அம்மாதம் 31-ஆம் நாள் வரை வேணாட்டுப் படைகளுக்கும், டச்சுப் படைகளுக்கும் இடையே பெரும் போர் மூள்கிறது. இதில் டச்சு நாட்டுத் தளபதி இஸ்தாக்கியுஸ் பெனடிக்ட் டிலனாய் தலைமையில் 23 வீரர்கள் கைது செய்யப்பட்டு மன்னரிடம் இழுத்து வரப் படுகின்றனர். இப்போரிலும் முக்கியப் பங்காற்றியவர் நீலகண்டன்.

*பத்து நாள் போராட்டம்,*
*பகைதுரையோர் மடிந்திடவே*
*இத்தரையில் மாவீரர்,*
*அரிய வெற்றிதான் கண்டார்.*
*சத்தியத்தின் வேதம் காத்த*
*உத்தமனாம் டிலனாயை*
*இத்தரையில் மன்னனிடம்,*
*இழுத்து வந்தான் நீலகண்டன்*

(1752-இல் புலவர் தொம்மந்திரு முத்துவால் எழுதப்பட்ட வேதசாட்சிகள் துயரமான பாதைகள் ஓலைச்சுவடி)

எந்த நீலகண்டனால் டிலனாய் இழுத்த வரப் பட்டாரோ அதே டிலனாய் கூறிய வார்த்தைகளால் இறை உண்மைகளை கற்றுத் தெளிகிறார்

நீலகண்டன். ஆழமான சுய பரிசோதனைச் செய்கிறார். உண்மைக் கடவுள் இயேசுதான் என நம்பிக்கை என்னும் கற்பாறையாகி நிற்கிறார். இவருக்குத் திருமுழுக்கு வழங்கிய வடக்கன்குளம் பங்குத்தந்தை ஜெவானி பத்திஸ்தா புத்தாரி (தமிழ் பெயராக பரஞ்சோதி நாதர்) அடிகள் கூட அரசின் உயர் பதவியில் இருக்கும் இவர் கிறிஸ்துவை மறுதலித்து விடுவாரோ என சந்தேகப்படுகிறார். பல்வேறு ஆய்வுகளுக்கு உட்படுத்துகிறார். இறுதியில் பெரும் ஞானியான தந்தையே எனக்கும் என்னைப் போன்றோருக்கும் ஞானம் நிறைந்த இறைவனைப் போதித்து விண்ணக வாழ்வு தந்திட கடல் கடந்து வந்துள்ளீர். யாருடைய வற்புறுத்துதலின் பேரிலும் நான் வரவில்லை... விசுவாசத்திற்காக கல்வாரிப் பாடுகளையும் பின் தொடர்வேன். என் சொத்து சுகங்களையும் உற்றார், பெற்றோரையும் என் உடல், பொருள், ஆவி அனைத்தையும் என் ஆண்டவருக்காக அர்ப்பணம் செய்யத் தயாராக இருக்கிறேன். இதை என் திருமுழுக்கின் அறிக்கையாக ஏற்று கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்த்தருளும் என்று உறுதியோடும், பணிவாகவும் கெஞ்சுகிறார். இந்த உணர்வை இவருக்கு ஊட்டியது டிலனாயின் நலமான நட்பு.

இந்த நலமான நட்பு தான் அவருக்கு, மகிழ்வான வாழ்வுக்கு வழிகாட்டியது. அவரது பெற்றோர், உற்றார், உறவினர்கள், நண்பர்களிடமிருந்து வந்த எதிர்பலைகள். அடுத்ததாக பரம்மாவினால் பூஜிக்கதற்காகவே படைக்கப்பட்டவர்கள் அந்தணர்கள் என்று மன்னர் உட்பட அனைத்து ஆட்சியாளர்களாலும் நம்பப்பட்டு வந்த அந்தணர்களிடமிருந்து வந்த எதிர்ப்பலைகள் என அத்தனையும் தாங்கும் சக்தி இறைவனிடமிருந்து கிடைத்தது. ஆண்டவர் இயேசுவின் மனித வாழ்வு இவரது பாடுகளின் வாழ்வோடு ஒத்துப் போகிறது.

இயேசு 40 நாள் உபவாசமிருந்து செபித்த பின்னரே தன் பணி வாழ்வைத் தொடங்கினார். இவர் 40 நாள் உபவாசமிருந்து செபித்த பின்னரே திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டார். இயேசு யூதர் அல்லாத சமாரியர்களுடன் உண்டார், குடித்தார், உறவாடினார். இவர் ஈனர், சண்டாளர் என புறக்கணிக்கப்பட்ட ஏழை எளியோருடன் உண்டார், குடித்தார், உறவாடினார்.

இயேசு திருமுக்கு யோவானிடமிருந்து திருமுக்குப் பெற்றுக்கொண்டார். இவர் புத்தாரி அடிகளாரிடம் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டார். இயேசு அநியாயமாக தீர்ப்பிடப்பட்டார். இவர் மன்னர் மார்த்தாண்டவர்மனால் தீர்ப்பிடப்பட்டார். இயேசு எவ்வாறு பொய்யாகக் குற்றம் சாட்டப் பட்டாரோ, அவ்வாறாக இவரும் வேணாட்டுப் பாணியில் மன்னருக்கு வரி கொடுக்க வேண்டாமென்றுக் கூறியதாகவும் பொய்யான குற்றச்சாட்டுகளை இவர் மீது அடுக்கினர். இயேசு கழுதையின் மேல் ஏற்றப்பட்டு எழுச்சியாக அழைத்து வரப்பட்டார். இவர் எருமையின் மேல் ஏற்றப்பட்டு கரும்புள்ளியும் செம்புள்ளியும் குத்தி, அவமானப்படுத்தப்பட்டு இழுத்து வரப்பட்டார். இயேசு தலையில் முள்முடி சூட்டப்பட்டது. இவர் சூரை முள்ளால் அடிக்கப்பட்டார். இயேசு கல்வாரி மலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இவர் ஆரல் காற்றாடி மலைக்குக் கொண்டு செல்லப் பட்டார். இயேசு சிலுவை சுமந்து சென்றார். இவர் கிராத்தடியில் தூக்கிச் செல்லப்பட்டார். இயேசு இறைவேண்டல் செய்தார். பின்பு சீடர்களையும் இறைவேண்டல் செய்யக் கேட்டுக்கொண்டார். இவர் கொல்லப்படும் முன் சேவகர்களிடம் இறை வேண்டல் செய்ய நேரம் கேட்டு பெற்றுக் கொண்டார். இருவருக்குமே ஐந்து காயங்கள். இருவருமே வெள்ளிக்கிழமைகளில் தத்தம் செங்குருதியை இம்மண்ணுக்கு ஈந்தார்கள். இருவருடைய மரணத்தின் போதும் பெரும் அதிசயங்கள் நடந்துள்ளன. இதுதான் இறைவன் இவருக்கு வழங்கிய மகிழ்வான வாழ்வு.

# 5. ஆனந்த வாழ்வின் ஆதாரம்

**அருள்பணி. முனைவர். வெ. மரிய அல்போன்ஸ்**

"பலியாக்கப்பட்ட உணர்விற்கு உள்ளாகாமல், பயன்படும் ஆளாக வாழ்வைச் சீரமைப்பது மகிழ்ச்சிக்கான முதல் தீர்மானம். பாலை நிலத்தைக்கடக்க நேர்ந்தாலும், ஆன்மாவின் ஆழத்தில் பாலைவனச் சோலையைப் பயிரிட்டுப் பராமரிப்பதுதான் ஆனந்தம். அன்றாடம் நமக்குமுன் புலரும் அருஞ்செயல்களுக்கு நன்றி நவில்வதுதான் நிறைவான மகிழ்ச்சிக்கு ஆதாரம்" - திருத்தந்தை பிரான்சிஸ், இளைஞர் மாநாடு, ரியோ டி ஜெனிரோ, ஜுலை 28, 2013.

மகிழ்ச்சிக்கான வழிமுறைகளாக திருத்தந்தை பிரான்சிஸ் உரைத்துள்ள நடைமுறைகளை அர்ஜென்டீனா நாட்டிலிருந்து வெளிவரும் "விவா" என்னும் வார இதழ், ஜுலை 27, 2014ஆம் ஆண்டில் தொகுத்துத் தந்துள்ளது. இதனை பிரபலமான பல ஆங்கில நாளிதழ்களும் மறுபதிப்பு செய்துள்ளன. பயனுள்ள இந்த நடைமுறைகளைப் படிப்போம்; திருத்தந்தை தந்துள்ள பத்து நெறிமுறைகளையும் அவரது ஏனைய உரைகளோடு தொடர்புபடுத்தி செயல்படுத்தினால் நிறைவான மகிழ்ச்சியை நாம் அடையலாம்.

**1. வாழ்வோம்! வாழ அனுமதிப்போம்!**

நமக்கு மட்டும் உரியது அன்று பொருளுள்ள வாழ்வு. இது யாவருக்கும் பொதுவானது. நாம் மட்டும் மகிழ்ந்து இருத்தல் என்பது வாழ்வைக் குறைக்கிறது, குறுக்குகிறது. நம்மைப்போன்று பிறரையும் வாழ அனுமதிப்பதுதான் மகிழ்ச்சியின் தொடக்கம். நம்மோடு நிற்பதும் நிலைப்பதும் இல்லை நமது மகிழ்ச்சி; அது நம்மோடு வாழ்பவர்களில் நீள்கிறது, நிறைவடைகிறது. நமது மகிழ்ச்சி இந்த பிரபஞ்சத்தையும் தொட்டு நிற்கிறது என்பதை நினைவில் வைத்திருக்க அழைப்பு விடுக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இதை விளக்கும் விதமாக அமைகிறது அவர் ஆற்றிய உரை: "நம்மை நாம் அன்பு செய்வதும் கடவுளை நாம் அன்பு செய்வதும் அயலாரில் நிறைவடைகிறது. இறைவனின் அரவணைப்பில் நிறைவான அன்பை நாம் அனுபவிப்பது உண்மை; இதே அன்பை நாம் பிற மனிதருக்கும் வழங்குவதுதான் அன்பின் தன்மை" (பொதுசந்திப்பு, 29 அக்டோபர் 2023). இத்தகைய பார்வை பெற்றவர்கள், "பிறருக்கு நெருக்கடிகள் தருவதில்லை; பிறர் நிம்மதியாகவும் நிறைவாகவும் வாழத் தகுந்த அன்புச் சூழலை உருவாக்கித் தருகிறார்கள்; தடைச் சுவர்களைத் தகர்த்து உறவுப் பாலம் அமைக்கிறார்கள்" (பொதுசந்திப்பு, ஜனுவரி 01, 2024).

**2. தாராளமாக நம்மைத் தருவோம்!**

பிறரில் நிறைவு காண்கிறது நமது மகிழ்ச்சி. எனவே, தயக்கம் எதுவும் இல்லாது பிறருக்கு நம்மைத் தாராளமாகத் தருவோம். நமக்குள்ளேயே முடங்குவதில்லை மகிழ்வான வாழ்வு; அது பிறரைத் தேடுகிறது; பிறரைத் தொடுகிறது. தன்னலம் தேடுகிறது நமக்குள் முடியும் வாழ்வு. "இது தேக்கமானது; தேக்கமானது எதுவும் நிறைவு காண்பதில்லை; தேங்கி நிற்கும் தண்ணீர்கூட துர்நாற்றம் வீசுகிறது. பிறரை நோக்கிப் பாய்ந்து ஓடாத வாழ்வு பாசி படர்ந்து சுவை இழந்து தேங்கும்!" (மறையுரை, மார்த்தா இல்லம், 29 அக்டோபர், 2019). "நமக்கென கூடுகட்டி குறுக்கப்பட வேண்டியது அல்ல நமது வாழ்வு!"

தயக்கமின்றி தேடுவதும் தாராளமாகத் தருவதும் நட்பு - சமூக உறவு. எல்லைகள் இல்லாதது சமூக உறவு! பூவுலகின் கதவுகளையே திறக்கிறது சமூக உறவு! (அனைவரும் உடன் பிறந்தோர், எண். 99). "சமூக நட்பு சமூக நீதிக்காக ஒன்றிணைகிறது. ஒத்துழைக்கிறது. சமூகப் பிளவு சாவின் அடையாளம்! சமூகப் பிளவு ஆன்மாவின் இறப்பு! தாராளமாக நம்மை சமூகத்திற்கு அர்ப்பணிக்காது முடங்குவது சாவுக்கு சமம். இதனால்தான் வாழ்விற்கு வழிவகுக்கும் சமூக நட்பை உருவாக்க உங்களை அன்புடன் அழைக்கிறேன்" (மாணவர்களுக்கு ஆற்றிய உரை, ஹவானா, 20 செப்டம்பர், 2015).

**3. நிரந்தரம் ஆகட்டும் நிதானம்!**

எதையும் முழுமையாக சாதிக்க அனுமதிப்பதில்லை அவசரம்; அதுபோலவே எதையும் மகிழ்வாக அனுபவிக்கவும் விடுவதில்லை அவசரம். இன்றைய விரைவு வாழ்விற்கு மாற்றாக நிற்கிறது அவசரம் காட்டாத நிதானம். ''வேரற்ற வேகத்திற்கு மாற்றாக நிற்கின்றன ஆழ்நிலை சிந்தனை மற்றும் கருணை காட்டும் மென்மை. விரைந்து செயல்படும் உயிரற்ற தொடர்புக் கம்பிகளைவிட மெதுவான உறவுத் தொடர்புகளே இன்றைய உலகிற்கான உடனடித் தேவை'' (உலக சமூகத் தொடர்பு நாள் செய்தி, 25 ஜனுவரி 2014). ''விரைந்து வெளியிடப்படும் தகவல்களைவிட, ஆழ்ந்து யோசிக்க வைக்கும் கருத்துக்களே பயனுள்ளவை.'' இதன் காரணமாகவே வேகத்தைவிட விவேகமே மேன்மை பெறுகிறது. வாழ்வின் நொடிப் பொழுதுகளை ரசித்து வாழத் தேவைப்படுகிறது துரிதமற்ற நிதானம். போட்டியை வளர்க்கிறது வேகம். முந்திச் செல்பவர்களுக்கே மதிப்பும் மரியாதையும் கிடைக்கின்றன. வேகத்தோடு போட்டியிட இயலாதவர்கள் வாழும் தகுதி இழந்துவிடுகிறார்கள்; பிழைக்கத் தெரியாதவர்களாக முத்திரைக் குத்தப்படுகிறார்கள். ஆனால், நிதானமாக நின்று, கவனித்து ஓடிய ஆமைதான் வெற்றிக் கொடி நாட்டியது – முண்டியடித்து ஓடிய முயல் அல்ல என்பதை உணர வேண்டிய காலம் இது. இதனையே மகிழ்ச்சிக்கான அடிப்படையாகக் காட்டுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்: ''நல்ல சமாரியனைப்போன்று அவசரம் தவிர்த்தால்தான் காயமுற்றவரைக் காணவும் கட்டுப்போட்டுக் குணம் தரவும் இயலும். தியானத்திற்கு உகந்தது நிதானம்; உள்பயணத்தை ஊக்குவிக்குகிறது நிதானம்'' (தவக்கால மடல் 2024).

**4. நலம் தரும் ஓய்வு**

பரவலாகி வருகிறது ஓய்வு இல்லாத உழைப்பு. நுகர்வுக் கலாச்சாரம் விடுமுறைகளை மதிப்பு இழக்க வைத்துவிட்டது. லாப நோக்கம் கொண்ட பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் இடைவேளை இல்லாது உழைப்பதை புதிய பண்பாடாகப் புகுத்தியுள்ளன. படிப்படியாக மாறிவிட்டது எட்டு மணி நேர வேலை. ''ஷிப்ட்'' இன்று பிரபலமாகிவிட்ட வார்த்தை. இதுபோல ''ஓவர் டைம்'' என்பதுவும் வழக்கமாகிவிட்ட சொல். மனிதர் கழனியில் கடினமாக உழைத்த காலத்தில் இந்த சொற்கள் பழக்கத்திற்கு வராதவை. இன்று அவை கட்டுப்படுத்தும் பதங்கள். இதேவேளை, ''இன்றைய உலகு விடுமுறைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் காத்திருக்கிறது. இவை ஓய்வு தருவதில்லை. மனிதரைப் பராக்கிற்கு உட்படுத்துகின்றன. இதைக் கருத்தில்கொண்டே விளம்பர நிறுவனங்கள் தளைக்கின்றன – பெரும் லாபம் ஈட்டுகின்றன'' (பொதுசந்திப்பு, 05 செப்டம்பர், 2018). உடல், உளம், ஆன்மா, அறிவு என ஐம்புலன்களுக்கும் ஓய்வு தேவை. "இன்பம் தேடுவது அல்ல ஓய்வு! உடலை உறுதிப்படுத்தவும் ஆன்மாவை ஆழப்படுத்தவும் அறிவைப் பெருக்கவும் உளத்தைப் பண்படுத்தவும் பயன்படுகிறது ஓய்வு. கேளிக்கைகளில் மூழ்குவதால் ஓய்வை அனுபவிக்க இயலுவதில்லை."

**5. குடும்பத்திற்கான நாள் ஞாயிற்றுக் கிழமை**

வாரத்தின் அனைத்து நாட்களையும் குடும்பத்திற்காக சம்பாதிக்கச் செலவிட்டாலும், ஞாயிற்றுக் கிழமையை குடும்பத்திற்காகச் செலவிடுவதுதான் மகிழ்ச்சிக்கு வழிவகுக்கும். ஞாயிறு வழிபாட்டில் குடும்பமாகப் பங்கேற்பது புனிதக் கடமை. இது வெறும் சடங்கு அல்ல. கிறிஸ்தவக் குடும்பங்கள் வாரத்தின் முதல்நாளை இறை உணர்வுடன் தொடங்குவது இனிமையான அனுபவம். ''ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பதால் இறைவன் நம்மிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்வதில்லை; நாம்தான் இறை அருளைப் பெறுகிறோம். இறைவார்த்தையைப் பொருளுடன் நாள்தோறும் வாழ்வதற்கான ஆசியை வழங்குகிறது ஞாயிறு திருப்பலி. அன்புக் கட்டளையை வாழ்வாக்கவும் இறைவார்த்தைக்குச் சான்றாகத் திகழவும் வரம் தந்து வழிகாட்டுகிறது ஞாயிறு நற்கருணைக் கொண்டாட்டம்'' (பொதுசந்திப்பு, டிசம்பர் 13, 2017). ''குடும்பத்தோடு அன்பு உறவை ஆழப்படுத்தவும் திருப்பலியில் பங்கேற்று இறைவனோடு உறவாடவும் உதவாத ஞாயிற்றுக் கிழமையால் என்ன பயன்?'' எனப் பொருத்தமான கேள்வியை

முன்வைக்கிறார் பிரான்சிஸ். மட்டுமல்ல, ‘‘கிறிஸ்து இல்லாத வாரம் வியர்த்தமானது; வாரத்தின் சுமைகளை இறைவன் பாதத்தில் இறக்கி வைக்கவும் குடும்பத்தினரோடு பகிர்ந்து குதூகலிக்கவும் பயன்படாத ஞாயிறு வீணானது’’ (பொதுசந்திப்பு, டிசம்பர் 13, 2017).

**6. மனித மாண்பிற்கு மதிப்பு**

தன்னைத்தான் ஒருவர் மாண்புடன் நடத்துவதும் பிறரை மதிப்புடன் அணுகுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும் பண்புகள். தனித்து வாழ்ந்தாலும் கூட்டத்தின் நடுவே நின்றாலும் மரியாதை காப்பது மதிப்பைக் கூட்டுகிறது; மகிழ்ச்சிக்கான காரணமாகிறது. மனிதர் ஒவ்வொருவரிலும் வித்தியாசங்கள். ஒருவர் இன்னோர் ஆள்போன்று இருக்கவும் இயலாது, தேவையும் இல்லாதது. ஒவ்வொருவரையும் வித்தியாசமாகவும் தனித்தன்மையுடனும் படைத்துள்ளார் கடவுள். இது கடவுளின் தனிச் சிறப்பு; மனிதருக்குக் கிடைத்துள்ள தனிக் கவனிப்பு. வித்தியாசங்களை ஏற்பதும் போற்றுவதும் மனித மாண்பைக் காக்கும் செயல்கள். ‘‘மாற்றுத்திறன் படைத்தவர்களும் மாண்புக்கு உரியவர்கள். இதனை சமூகம் இன்று ஒருவாறாக ஏற்றுள்ளது. இருப்பினும், சிறப்புத் திறன் உடையவர்களை ஒதுக்குவதும் வீசி எறிவதும் பரவி வருகின்றன’’ என வேதனை அடைகிறார் திருத்தந்தை (வத்திக்கான் சமூக அறிவியல் கழகத்தில் ஆற்றிய உரை, ஏப்ரல் 11, 2014). இதுபோலவே, ‘‘பாலின வேறுபாடுகளை ஏற்கும் காலக்கட்டத்தில் வாழ்கிறோம். அவரவர் உடல் தன்மையைப் பொறுத்தது பாலின ஈர்ப்பு. இது அவர்களின் குற்றம் அன்று; அவர்களும் கடவுளின் பிள்ளைகள், அவர்களுக்கும் தேவைப்படுகிறது குடும்பம். எனவே, அவர்களைத் தீர்ப்பிட்டுத் தண்டிக்காத பரந்த மனம் யாவருக்கும் இன்று தேவைப்படுகிறது’’ (நேர்காணல், அசோசியேட் பிரஸ், ஜனுவரி 25, 2023).

**7. இயற்கையோடு இணைந்த வாழ்வு**

இன்று மனித இனத்தைத் தாக்கும் பல நோய்களுக்கும் காரணமாகிறது இயற்கையை விட்டு விலகிய வாழ்வு. நம் முன்னோர் வாழ்ந்த முறைக்கும் இன்று நாம் பின்பற்றும் வாழ்க்கை முறைக்கும் பாரதூர வேறுபாடுகள். அவசரகதியில் தொடரப்படும் தற்கால வாழ்வினால் பல இன்னல்களை இன்று நாம் சந்திக்கிறோம். இதற்கு மாற்றாக திருத்தந்தை பிரான்சிஸ், ‘‘புகழனைத்தும் உமதே!’’ என்னும் மடலை எழுதியுள்ளார். ‘‘புதிய மனிதரால் மட்டுமே இயற்கையோடு புது வகையான உறவை உருவாக்க இயலும்; மனித இதயத்தைக் குணப்படுத்தாது, சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் சந்திக்கும் நெருக்கடிக்களுக்கான தீர்வு காண்பது கடினம்’’ என்று அறிவுறுத்துகிறார் திருத்தந்தை (புகழனைத்தும் உமதே, எண். 205). இந்த பிரபஞ்சம் அனைவருக்கும் சொந்தமானது, பொதுவானது; யாவருக்கும் உரியது; இது ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ள பொதுவான வீடு (புகழனைத்தும் உமதே, எண். 262). எனவே, இந்த உலகைக் காப்பது மக்கள் இனம் முழுமைக்கும் உள்ள பொறுப்பு. இயற்கையுடன் இணையும் வாழ்வு ஒன்றே இவ்வுலகை அழிவினினின்று காக்கும் ஆயுதம். நுகர்வு வெறியும், தவறான முன்னேற்றக் கோட்பாடுகளும், துரிதமான வாழ்வு முறையும் அழிவிற்கே அழைத்துச் செல்லும். இதற்கான மாற்று மனிதர் மனங்களிலேயே உள்ளது. எளிமையான வாழ்வு, ஏழையர்மீது இரக்கம், ஒருங்கிணைந்த வளர்ச்சி இவையே இவ்வுலகை அழிவினின்று காக்கும் அரண்கள்.

**8. நேர்மறை எண்ணங்கள் வளர்ப்போம்**

எதிர்மறைகள் நம்மை எளிதாகத் தாக்குகின்றன. இதற்கு மாற்றாக, நேர்மறை எண்ணங்களை வளர்க்க அடிப்படையாக அமைகிறது இறை அனுபவம். இறைவனின் இரக்கத்தை அனுபவித்தவர்கள் கணக்கில் வைப்பதில்லை கரும்புள்ளிகள். பிறருக்கு இருளாகத் தெரிகின்றவையும் நேர்மறையாளர்களுக்கு வெளிச்சத்தையே காட்டும். ‘‘எதிர்நோக்கின் திருப்பயணிகள்’’ என்ற மையச்சிந்தனையில், யூபிலி 2025-ற்கான தயாரிப்புகளை முன்னெடுக்கும் திருத்தந்தையின் நேர்மறை அணுகுமுறை நம்மையும் ஈர்க்கிறது. இளைஞர்களுக்கு அவ்வப்போது அவர் தரும்

ஊக்க உரைகளும் நேர்மறையை நிலைநாட்டுபவை.

இன்று திருத்தந்தை பிரான்சிஸ் சந்திக்கும் இடர்கள் ஏராளம். திருஅவையின் உயர்மட்டத்திலிருந்தே கிளம்பியுள்ளன அவருக்கு எதிரான புகைச்சல்கள். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முழுமுதல் படிப்பினையாகிய மறுமலர்ச்சியை ஏற்காதவர்கள் அவரை முழுவீச்சுடன் எதிர்க்கிறார்கள். அவரது நேர்மை, தலைமை, பார்வை, போதனை யாவற்றையும் ஏளனமாக பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். இவை யாவற்றையும் பொருட்படுத்தாது வீரத்துடன் பயணிக்கிறார் பிரான்சிஸ். அவரது துணிச்சலுக்குக் காரணமாக அமைகிறது அவரில் நிரம்பியுள்ள நேர்மறையான எண்ணங்கள். நேர்மறையான எண்ணங்கள்தான் தடைகளைத் தகர்க்கும் ஆயுதம் என்பதை நிரூபிக்கிறார் திருத்தந்தை.

**9. வாழ்வுச் சான்றால் வளப்படுத்துவோம்!**

அறிவுரைகள் இன்று ஏற்கப்படுவதில்லை; முன்னுதாரணங்களே பின்பற்றப்படுகின்றன. வார்த்தைகளில் வெளிப்படும் வீரத்தைவிட எடுத்துக்காட்டாக வாழ்வதற்கே கிடைக்கிறது மதிப்பு. அதிகம் பேசாத அதிசயமாகத் திகழ்ந்த இயேசுவின் தந்தை யோசேப்பை இதற்கான முன்னுதாரணமாகக் காட்டுகிறார் திருத்தந்தை.''வாழ்வால் போதித்தவர் புனித யோசேப்பு. ஆழம் தொட்ட அமைதியை எடுத்துக்காட்டுபவர் இயேசுவின் தந்தை. ஆரவாரம் எதுவும் இல்லாத எளிமையால் இன்றும் நம்மை ஈர்ப்பவர் மரியாவின் துணைவர்'' (பொதுசந்திப்பு, நவம்பர் 17, 2021). வார்த்தைகள் தேடுவது விளம்பரம்! உள்ளொளி ஏற்றுவது எடுத்துக்காட்டு! முந்தையது வேகமாகப் பரவும்; பிந்தையது தாமதமாகத் தெரியும். ஆனால், அதுவே தொடர்ந்து துலங்கும். இதைத்தான் மகிழ்ச்சிக்கான ஒன்பதாவது இலக்காகத் தேர்ந்து தருகிறார் திருத்தந்தை. சமூக ஊடகங்களின் மேலாதிக்கம் முன்னிலையில் நிற்கும் இந்த வரலாற்றுக் கட்டத்தில் சத்தமற்ற சான்றாகத் திகழ்வது இலகுவானது அல்ல; இதற்கு பாசாங்கு இல்லாத பணிவு வேண்டும், விளம்பர விருப்பம் இல்லாத பண்பு வேண்டும்.

**10. அமைதியின் தூதுவர்களாக அர்ப்பணிப்போம்!**

''எங்கும் எப்பொழுதும் எதிரொலிக்கிறது சாவின் சத்தம்! போர்க் காலத்திலும் போர்க் களத்திலும் மட்டுமல்லாது மனிதர் இதயங்களையே நொறுக்கி வாகை சூடுகிறது இறப்பின் எதிரொலி'' என நிலவும் சூழலைக் கவலையுடன் காட்டுகிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (பொதுசந்திப்பு, அக்டோபர் 27, 2023). போர்க் கருவிகளின் சத்தம் காதைத் துளைக்கிறது. ''படைக் கருவிகளைத் தரப்படுத்தியுள்ளோம்! ஆனால், மழுங்கடிக்கப்பட்டுள்ளது நம் மனசாட்சி. எண்ணங்களைப் பட்டைதீட்டிக் கூர்மைப்படுத்தியுள்ளோம்! ஆனால், முடிவுகள் அனைத்தும் மூர்க்கமாகத் தெறிக்கின்றன. யுத்தமும் வன்முறையும் சாவின் சக்திகள்; அன்பும் அமைதியுமே வாழ்வின் கொடைகள். போர்களால் வீழ்வது மனிதம்! அமைதிக்காக ஏங்குகிறது உலகம்!''(ஆயுதங்களின் அலறல் குறையட்டும் - சிரியாவில் அமைதி திரும்ப செபிப்போம், செப்டம்பர் 07, 2023). ஒற்றைக் குரலாக மீண்டும் மீண்டும் ஓங்கி ஒலிக்கிறது திருத்தந்தையின் வேண்டுகோள். ''அமைதியின் இருப்பிடம் நம் இதயம்; இதயத்தில் இல்லாத அமைதியை உலகிற்குத் தர இயலாது. எனவே, இதயத் தூய்மை பெறுவோம்! அமைதிக்கு எதிரான காழ்ப்புணர்வுகளைக் களைவோம். நம் இல்லங்களிலிருந்து பிரவாகமாக ஊற்றெடுத்து உலகை நிரப்பட்டும் உண்மையான அமைதி'' (பொதுசந்திப்பு, டிசம்பர் 07, 2023).

**மகிழ்ச்சிக்கான தொடர் தேடுதல்**

ஒரே நாளில் அடைவதில்லை மகிழ்ச்சி! அது ஒரு தொடர்முயற்சி. முடிவற்றது மகிழ்விற்கான தேடல். திருத்தந்தையின் வழிமுறைகள் தொடர்தேடலுக்கான திசைகளைத் திறக்கின்றன. அடைந்துவிட்டோம் என்று அடைபட்ட எண்ணம் கொள்ளாது தொடர்ந்து தேடுவதுதான் மகிழ்ச்சிக்கான மனநிலை. மகிழ்ச்சி என்பதே மனநிலைதான்; செயலில் ஈடுபடும் செவ்விய மனநிலை. தொடர்ந்து தேடும் செயல்முறைதான் ஆனந்த வாழ்விற்கான அடித்தளம்!

# 6. இந்தியராகிய நாம்

அருள்பணி. முனைவர். M.C. இராஜன்

இந்தியா நீண்ட வரலாறுகொண்ட ஒருநாடு. பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம், பண்பாட்டு பின்புலங்களைக் கொண்டது. உலகின் மூத்தகுடி என்று அறியப்படுகின்ற தமிழினம் இந்தநாட்டில் தான் குடிமக்களாக வாழுகிறோம். இன்றைய இந்தியா என்கிற வரைபடம் 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்திய சுதந்திரத்தோடு தொடங்கியது. அப்போதும் இந்த நிலவரைக்குள் ஏராளமான சமஸ்தானங்கள், சுயாட்சி பிரதேசங்கள், அரசர்களால் ஆளப்பட்ட நாடுகள் மலிந்துகிடந்தன. இவற்றையெல்லாம் பல்வேறு முயற்சிகளுக்குப்பிறகு ஒன்றுசேர்த்து இன்றுநாம் பார்க்கின்ற காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை என்கிற இந்த அரசியல் வரைபடம் உருவானது.

அதற்குமுன்னால் சில நூற்றாண்டுகள் வாணிபத்திற்காக இந்திய நாட்டிற்கு வந்த ஆங்கில வாணிபர்கள், இந்த நாட்டிற்குள்ளால் மலிந்து கிடந்த சாதிப் பிரிவினைகளை, சமய பூசல்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு வாணிபம் செய்யவந்த இடத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக நாட்டையும் பிடித்து தங்களுக்கு அடிமையாக்கி, 1857 முதல் ஆங்கிலேய அரசினுடைய காலணி நாடாக இந்தியா மாறிப் போனது. நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பிறகு இந்தியா சுதந்திரத்தை நோக்கி நகர்ந்தது.

இந்தப் போராட்டங்களில் பாராட்டப்பட வேண்டிய, பார்த்துகற்றுக் கொள்ளவேண்டிய மிக முக்கிய மானவிடவியம் என்னவென்றால் ‘இந்தியாவில் இருந்த மக்கள் விடுதலை பெறுகின்ற ஒரு முனைப்போடு தங்களுடைய சாதிமத இன மொழிபாலின பிரதேச வேறுபாடுகளை கடந்து தலைவர்களின் பின்னால் அணிதிரண்டனர்’. எனவே நம் சக குடிமக்களின் சிறைவாசம், செக்கிழுத்தல், உயிரை விலையாக தருதல் போன்ற தியாகங்களுக்குபிறகு இந்தியா சுதந்திரக் கனவை சுவாசித்தது. அதற்குப் பிறகு ஒரு சமத்துவ, சமதர்ம, சோசலிச, மக்களாட்சி, குடியரசாக வரலாற்றில் மலர்ந்தது 1950-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள்.

அதற்குப் பிறகு கடந்த 74 ஆண்டுகளாக இந்தியாவை இந்திய அரசியலமைப்புச் சட்டம் தான் ஆண்டுவருகிறது. இந்தியாவை தங்களுடைய தியாகத்தால் கட்டிஎழுப்பிய முன்னோர் அதுதொடர்ந்து இனிமேல் யாருக்கும் அடிமைப்படாமல் சுதந்திரக் காற்றை சுவாசிக்க கூடிய ஒருநாடாக இருக்கவேண்டும் என்று விருப்பப்பட்டார்கள்.

இந்தியாவின் சிறப்பம்சமே அதனுடைய பன்முகத்தன்மைதான். ஓராயிரம் சாதிகள், உலகில் உள்ள எல்லா மதங்கள், பல்வேறு இனங்கள், ஆயிரக்கணக்கான மொழிகள், வேறுபாடுகள் கொண்டபண்பாடுகலாச்சாரம், உணவு, உடை, வாழ்விடம் என வேற்றுமையில் ஒன்றுபட்ட இந்தியாதான் இதன் அழகு. இதனை சிதைக்க நினைப்பவர்கள் அரசியலமைப்பின் எதிரிகள். இந்திய நாட்டின் பன்முகத்தன்மைக்கு துரோகம் விளைவிப்பவர்கள். இங்கே இந்திய குடிமக்கள் மட்டுமே உண்டு. பெரும்பான்மை சிறுபான்மை என்பதெல்லாம் ஒருவரைஒருவர் வெறுப்பதற்கல்ல. மாறாக அனைவரும் சமத்துவ உரிமைகளோடு வாழ்வதற்கு வழிவகை செய்யவே. எனவே,

இந்தியராகிய நாம் யார், நமது உரிமைகள் என்ன, கடமைகள் என்ன, எங்கே தோற்றுப் போனோம், எப்படி இந்தியாவை நமது வருங்கால சந்ததிகளுக்கு இறையாண்மை மிக்க, சமய சார்பற்ற, சமதர்ம, மக்களாட்சி, குடியரசாக விட்டுச் செல்லப் போகிறோம்?

இந்த சிந்தனையோடு நமதுஅரசியல் அமைப்புச் சட்டத்தின் தலைமையில் இந்தியராய் ஒன்றிணைந்து, இந்தியாவை, அதன் மக்களாட்சியைபாதுகாப்பதில் நமது பங்கு என்ன என்பதை புரிந்து கொள்ளவாருங்கள். இணைந்த கரங்களோடு இந்திய நாட்டில் நிலவும் தீமைகளுக்கு முடிவுரை எழுத, இந்த முன்னுரையோடு ஆரம்பம் ஆகிறது, இந்தியராகிய நாம், என்னும் இத்தொடர்.

# 7. நலமான தோழமையும் போதையில்லா வாழ்வும்

அருள்பணி. முனைவர்.
**J. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய்

**அறிமுகம் :** தோழமை எல்லா மனிதருக்குமே நட்பு, ஆதரவு, மதிப்பு, மகிழ்ச்சி இவற்றைக் குறிக்கும் முக்கியமான பண்பாக இருக்கின்றது. எல்லா மனிதருக்கும், எல்லா வயதினருக்கும் வேண்டிய பொதுவான பண்பாக தோழமை இருந்தாலும், வளரிளம் பருவத்தில் இருக்கும் இளையோரிடம் மிக அதிகமாகத் தோழமைப் பண்பு இருக்கின்றது.. நலமான தோழமையில்தான் போதையில்லா மகிழ்வான வாழ்வு மலர்கின்றது. நலமான தோழமைதான் இவர்களைத் தொடர்ந்து எந்தவிதமான போதையூட்டிகளுக்குள்ளும் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாக்கின்றது.

**தோழமை அழுத்தம் :** எல்லா மனிதருக்கும், எல்லா வயதினருக்கும் வேண்டிய பண்பாக தோழமை இருந்தாலும், வளரிளம் பருவத்தில் இருக்கும் இளையோரிடத்தில் ஒரு தோழமை அழுத்தம் (peer pressure) வந்திணைந்து கொள்கின்றது. இந்த தோழமை அழுத்தம்தான் இப்பருவத்தில் மிகப்பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தும் அம்சமாக இருப்பதாக பல ஆய்வுகள் தெளிவுப் படுத்துகின்றன. ஒரு தோழரிடமிருந்தோ அல்லது ஒரு தோழமைக் குழுவிடமிருந்தோ எதிர்மறையாக வருகின்ற வற்புறுத்தலைத் தோழமை அழுத்தம் என்று சொல்லலாம். சக நண்பர்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது இளையோருக்கு முக்கியமான எதிர்பார்ப்பாகும். குழுவில் ஒருவராக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற வேட்கை பல இளையோரை குழுவினரின் வற்புறுத்தலுக்கு, அழுத்தத்திற்கு சரியென்று சொல்ல வைத்து விடுகின்றது.

**நலமான தோழமை :** அதாவது நேர்நோக்கு தோழமை வழியாக சகத்தோழர்கள் நல்ல முன்மாதிரி காணுதல், ஊக்கம் பெறுதல், சுயவிழிப்பு கொள்தல், தன்னம்பிக்கை உயர்தல், இணைந்து வளர்தல், சவால்களை எதிர்கொள்ளல், திறன் வளர்த்தல், திறனாய்வு செய்தல், பாதுகாப்பை உணர்தல், இலக்குகளை அடைதல், சுய ஒழுக்கத்தில் அக்கறைகாட்டல், பொதுநலனில் ஈடுபாடு செலுத்துதல், படிப்பில் கருத்ததாயிருத்தல் போன்ற நல்லத் தாக்கங்களை பெற்றுக் கொள்கின்றனர், கற்றுக் கொள்கின்றனர்.

நலமான தோழமையில் நல்ல, சிறந்த, பயனுள்ள காரியங்கள் மட்டும்தான் முதன்மையாக இருப்பதால், இன்றையச் சமுதாயத்திற்கு போதைப்பொருள்களால் ஏற்படும் பாதிப்புகளைச் சிந்தித்துப் பார்க்கின்றனர். அழிவுகளை ஆலோசித்துப் பார்க்கின்றனர். விளைவுகளை நினைத்துப் பார்க்கின்றனர். துன்பக் கதறல், துயரக் கண்ணீர், ஓயாத சண்டை, ஒழியாத புலம்பல், கலங்கிச் சிவந்த கண்கள், காரணம் தெரியாத புண்கள் ஆகியவற்றை தாராளமாக போதைப்பொருள் உருவாக்குகின்றன என்று உணர்ந்திருக்கின்றனர்.

சகதோழர்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் மதுக்குடிக்க வேண்டும், சிகிரெட் பிடிக்க வேண்டும், கஞ்சா அடிக்க வேண்டும், கூலிப் எடுக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இங்கு இல்லை. அதோடு அது எப்படியிருக்கிறதென சோதித்துப் பார்க்கவோ, ருசிச்சுப் பார்க்கவோ, குடிச்சுப் பார்க்கவோ வேண்டும் என்ற ஆசை இவர்களிடம் இல்லை. இவர்களால் எளிதாகப் போதையைத் தவிர்க்க முடிகின்றது.

**நலமற்ற தோழமை :** அதாவது எதிர்மறை தோழமை வழியாக தவறான வழிகாட்டுதல், குறைபாடுள்ள முடிவெடுத்தல், ஆபத்தான நடத்தைகளில் ஈடுபடுதல், அபாயகரமான நடவடிக்கைகளில் இறங்குதல், வன்செயல்களில் நுழைதல், உணர்வுபூர்வமாகச் செயல்படுதல், சொல்லுகிறபடி செய்துவிடல், தன்னடையாளத்தை இழத்தல், குறிக்கோளின்றி அலைதல், முன்சார்பு எண்ணங்களோடு திரிதல், பொறுப்பற்று நடத்தல், அவசரம் காட்டுதல் போன்ற நலமற்ற தாக்கங்களைப் பெற்றுக்கொள்கின்றனர், ஏற்றுக் கொள்கின்றனர். எதிர்மறை தோழமை நலமற்ற தவறான, ஆபத்தான அபாயகரமான, பொறுப்பற்ற காரியங்களில் முழுமூச்சுடன் முன்யோசனையின்றி ஈடுபட செய்துவிடுகின்றது.

எதிர்மறை தோழமை நலமற்ற போதையை நோக்கிய வாழ்வுமுறைக்கு ஜாலிக்காக சோதித்து பார்க்க இன்ப உணர்வை அனுபவிக்க கற்பனை உலகில் சஞ்சரிக்க வேதனை தீர்க்க கவலை போக்க தூக்கம் வர கட்டுப்பாட்டை எதிர்க்க சகதோழர்கள் மதுக்குடிக்க வேண்டும், சிகரெட் பிடிக்க வேண்டும், கஞ்சா அடிக்க வேண்டும் என்று சொல்லும்போது அதைத் தவிர்க்க முடியாமல் ஆகிவிடுகின்றது. அதோடு அதைச் சோதித்துப் பார்க்க, ருசிச்சுப்

பார்க்க, குடிச்சுப் பார்க்க வேண்டும் என்ற கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர்.

சகநண்பர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், குழுவில் ஒருவராக அங்கீகரிக்க வேண்டும் என்ற வேட்கை நல்லதல்ல என்று தெரிந்தும் குழுவினரின் வற்புறுத்தலுக்கு சரியென்று சொல்லி விடுகின்றனர். போதையில்லா வாழ்வைத் தூண்டும் தோழமை நல்ல நட்புத் தோழமை பெற்றவர் போதையூட்டும் பொருட்களாக இருக்கட்டும், போதையூட்டும் செயல்முறைகளாக இருக்கட்டும், போதையூட்டும் நடத்தைகளாக இருக்கட்டும் இவை எல்லாமே நல்லதல்ல என்ற அறிவுத் தெளிவு பெற்றவர்.

எனவே ஒரு தடவை, இன்று ஒருநாள் மட்டும் என்று ஆசைக்காட்டி அழைக்கப்பட்டு பின்பு நிறுத்த முடியவில்லை, கட்டுப்படுத்த இயலவில்லை என்ற பரிதாபமான நிலைக்கு ஆளாக நேரிடும் என்று முன்கூட்டிய தெரிந்து வைத்திருப்பவர். ஆம், ஒரு தடவை சில தடவையாகி, சில தடவை பல தடவையாகி, பல தடவை அடிக்கடியாகி, அடிக்கடி தொடர்ந்து போதைப்பொருளுக்கு அடிமையாகின்ற நிலைமையை ஏற்படுத்தி விடுகின்றது என்ற அறிவியல் பார்வை கொண்டவர்.. ஆம், கொண்டாட்டமென தொடங்கியது, பொழுதுபோக்காக தொடர்ந்து, பழக்கமாக வளர்ந்து, பின்பு போதை நோயாளியாக மாறிவிடுகின்றது என்ற எதார்த்தத்தை உணர்ந்து கொண்டவர்.

**போதையைத் தவிர்க்கும் நலமான தோழமை :** போதை எந்தவிதத்தில் இருந்தாலும், எந்த அளவில் இருந்தாலும், எந்த வகையில் இருந்தாலும், எந்த ஆளிடம் இருந்தாலும், எந்த இடத்தில் இருந்தாலும் எனக்கு வேண்டாம் மற்றும் நான் எடுக்க மாட்டேன் என்று உறுதியுடன் இருப்பர். ஏனென்றால் போதை என்றாலே அழிவு, சீரழிவு, பேரழிவு என்று இவர்களுக்குத் தெரியும். போதையைத் தவிர்க்க வேண்டும் என்றத் தெளிவோடு செயல்படுவர். இதற்கு மேலாக இவர்களின் தோழமைக்குழு இவர்களுக்கான பாதுகாப்பையும், ஆதரவையும், ஊக்கத்தையும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கும்.

**போதையைத் தடுக்கும் நலமான தோழமை :** போதையினால் ஏற்படும் விளைவுகளையும், பாதிப்புகளையும், தீமைகளையும், கேடுகளையும் அறிந்தவர்கள் இத்தகைய போதைப்பொருட்களை தாங்கள் தவிர்ப்பதோடு, தங்களின் சக தோழர்களும் இப்போதைப்பொருட்களுக்கு ஆளாகக்கூடாது என்று அவற்றின் பழக்கத்தைத் தடுக்கும் முனைப்பிலும் ஈடுபடுவர். முறைதவறி கள்ளத்தனமாக விற்கப்படும், வாங்கப்படும், கடத்தப்படும் போதைப்பொருட்களைத் தடுக்கும் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுவர். இவர்களுக்கு இந்த இளவயதிலேயே தாங்கள் மட்டுமின்றி யாருமே போதையினால் பாதிக்கப்படக்கூடாது என்ற சமூக அக்கறை இருக்கும்.

**போதையை விலக்கும் நலமான தோழமை :** இளையோராக இருந்தாலும் இவர்கள் போதை என்றாலே பாதிப்புதான் என்று தங்கள் தோழமைக் குழு வழியாக தெளிவுபட புரிந்துணர்துள்ளதால், போதைப்பொருட்களை அரசு விற்பனைச் செய்வதை, வியாபாரம் செய்வதைத் தடை செய்ய வேண்டும் என்று மக்கள் நலன் மீது ஆர்வம் உடையவர்கள். போதை நாட்டுக்கும், வீட்டுக்கும், உயிருக்கும் கேடு என்று அரசு போதைப் பொருளிலே போட்டு விளம்பரப்படுத்தி விட்டு ஏன் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அரசுக்கு எடுத்துச் சொல்லவும் தயாராக இருப்பவர்கள். சிறுவயதாக இருந்தாலும் அரசின் போதைசார் நிலைப்பாட்டில் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தயங்காதவர்கள்.

**நிறைவாக :** நலமான தோழமையில் போதையில்லா மகிழ்வான வாழ்வு மலர்கின்றது. நலமான தோழமை இவர்களைத் தொடர்ந்து எந்தவிதமான போதையூட்டிகளுக்குள்ளும் சிக்கிக் கொள்ளாமல் பாதுகாக்கின்றது. ஒருவேளை இக்கட்டான சூழ்நிலையில் ஏதாவது போதைக்கு ஆளானாலும் நலமான தோழமைக் குழுவானது உடனிருந்து உதவி புரியும். இப்போது இந்த இளையோரும் இனி நான் போதையின் பாதையில் போகமாட்டேன் என்று போதையைத் தவிர்த்து, மகிழ்வான நிறைவான நலமான வாழ்வு வாழ்ந்திட முடியும்.

போதை என்ற மாபெரும் தீயசக்திக்கு ஆளாகாமலிருக்க இளையோர் விரும்பினால், முடிவெடுத்தால், முனைப்பெடுத்தால் நலமான தோழமையை நம் வாழ்வில் ஏற்றுக்கொண்டு நாம் மகிழ்வோடு ஒன்றிணைந்து செயல்படலாம்.

இளையோரே

***நலமான தோழமையை நாடுவோம்!***
***நலமான தோழமையோடு போதையை தவிர்ப்போம்!!***
***நலமான தோழமையோடு போதையைத் தடுப்போம்!!!***
***நலமான தோழமையோடு போதையை விலக்குவோம்!!!!***
***நலமான தோழமையோடு போதையில்லாமல் மகிழ்வாக வாழுவோம்!!!!!***



## 8. தேன்சிட்டுப் பதில்கள்....

**அன்பான வாசகர்களே,**

புதிய தேடலின் புதிய வரவாக தேன்சிட்டுப் பதில்கள் என்னும் கேள்வி-பதில் பகுதி இடம்பெற்றுள்ளது. உங்கள் கேள்விகளை புதிய தேடல் அலுவக முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

❍ பெண்களில் பேறு பெற்றவர் அன்னை மரியாள், ஆண்களில்? (அபிலாஷ், திருவட்டார்)

➢ சந்தேகமென்ன, அன்னை மரியாவின் கணவர் புனித யோசேப்புதான். அவர் இயேசு ஆண்டவரை தந்தையாக இருந்து வளர்த்தவராச்சே.

❍ திருத்தந்தை பிரான்சிஸ் பற்றி சொல்லலாமா? (பனிமலர், மஞ்சாலுமூடு)

➢ அவர் நல்லவர், ஞானமுள்ளவர், இறைப் பற்றாளர், நீதிமான், சிறந்த நிர்வாகி, நல்ல வழிகாட்டி. மொத்தத்தில் இயேசுவுக்கு சான்று கூறும் உண்மைச்சீடர்.

❍ பகைவருக்கும் அன்பு செய்ய கூறப்பட்டுள்ளதே எனக்குப் பகைவர்களே கிடையாதே? (அபிஷேக், கல்லுவிளை)

➢ நல்லது, உங்கள் பெற்றோர், உடன்பிறந்தோர், உன் வாழ்வோர், நண்பர்களை அன்பு செய்து வாழுங்கள், வாழ்த்துக்கள்.

❍ உனக்குப் பாடத் தெரியுமா? (ஜெபிஷா, திங்கள் நகர்)

➢ தெரியுமாவா? ஏன் உங்கள் ஆலயத்தில் பாட ஆள் தட்டுப்பாடா?

❍ கள்ளக்குறிச்சி விஷச்சாராயம் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு தலா ரூ. 10 இலட்சம் அரசு வழங்கியது சரியா? (கவின் குமார், தக்கலை)

➢ உயிரிழந்தவர்களுக்குக் கொடுத்திருந்தால் தவறு. அவர்களது குடும்பத்தாருக்கு கொடுத்திருப்பது மனிதாபிமான முறையில் சரியே. இனிமேல் இதுபோன்ற துயர நிகழ்வுகள் நடைபெறாமல் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

❍ நடிகர் விஜய் தமிழக வெற்றிக்கழகம் என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கியிருக்கிறாரே? என்ன நினைக்கிறாய்? (ஜீவராஜ், படந்தாலுமூடு)

➢ இந்திய ஜனநாயகத்தில் யாருக்கும் கட்சி தொடங்க உரிமை உண்டு. அதனடிப்படையில் நடிகர் விஜய் கட்சி தொடங்கியிருக்கிறார். அவ்வளவுதான்.

❍ ஆலயம் தொழுவது தேவையா? (கனகராஜ், மார்த்தாண்டம்)

➢ ஆலயத்தில் சென்று அனைவரும் ஒரே உள்ளத்தவராய் ஒன்றிணைந்து ஆண்டவரைப் போற்றி வணங்கி, ஆராதிப்பது அவசியம். ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் ஆலயத்திற்கு செல்வது திருஅவையின் கட்டளையாச்சே...

❍ எப்படிப்பட்ட நட்பு கூடாது? (ரெத்தின குமாரி, குழித்துறை)

➢ இயேசுகிறிஸ்துவை முப்பது காசுக்காக காட்டிக் கொடுத்த சீடன் யூதாசைப் போன்ற பேராசை நட்பு கூடவே கூடாது.

❍ ஒன்றிய அரசின் கூட்டணி ஆட்சி எப்படி?

➢ மனிதன் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு. ஜனநாயகத்தை ஆட்டுவிக்க நினைத்தவர்கள் ஆடிக்கொண்டே இருக்கிறார்கள். போகப் போகத் தெரியும்.

❍ ராகுல்காந்தி மக்களவை எதிர்கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளாரே? (வினீஷ், நடைக்காவு)

➢ நல்ல தொடக்கம், வாழ்த்துகள்!

# ൭. மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா? அத்தகைய திருமணம் செல்லத்தக்கதா? செல்லத்தகாததா?

அருள்பணி. முனைவர். **G**.ஆரோக்கிய ஜோஸ் **DCL**

திருமணவாழ்வு என்பது ஒருஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேநிகழும் நிலையானஅன்பின் சங்கமம் ஆகும். இத்தகைய திருமணவாழ்வு சிலவேளைகளில் கசந்துவிடுவதைநாம் பார்க்கின்றோம். ஆள் பார்த்து, நாள் பார்த்து, நல்லநேரம் பார்த்து, சீர்வரிசைகள் நிறைய செய்து நடத்தப்பட்ட பலதிருமணங்கள் இடையிலே ஒன்றுமில்லாத நிலைக்குத் தள்ளப்படுவதைநாம் பார்த்திருக்கலாம். மனநோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை அதனைப்பற்றி சொல்லாமலேயே திருமணம் செய்துகொண்டால் சரியாகிவிடும் என்ற எண்ணத்தில் பலர் திருமணம் செய்து கொடுக்கின்றனர். இவ்வாறு நிகழ்த்தப்படுகின்ற திருமணத்தில் மனநோயால் பாதிக்கப்பட்டவர் கொடுக்கும் சம்மதம் உண்மையிலேயே முழுமையான சம்மதமாக இருக்குமா? என்ற கேள்விக்கு இலத்தீன் வழிபாட்டுமுறை கத்தோலிக்க திருஅவைச் சட்டஎண் 1095, பிரிவு 3 இவ்வாறு கூறுகிறது. உளவியல் காரணங்களால் திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளைஏற்க இயலாதவர்கள் உண்மையான முழுமையான சம்மதம் அளிக்கமுடியாது. இப்படிப்பட்ட ஒருவர் திருமணம் என்றால் என்ன என்பது பற்றியும்,கணவன் மற்றும் மனைவியின் கடமைகள் உரிமைகள் பற்றியும் போதிய அளவு அறிவு உடையவராயும், அதைப்பற்றியும் அறிந்திருக்கலாம். எனவே அவர் திருமணம் செய்து கொள்ள தகுதியானவர் என முடிவுசெய்யமுடியாது. திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளை ஏற்று நிறைவேற்ற ஆற்றல் இல்லாதவராக இருக்க ஒருவரின் மனநிலைப் பாதிப்பால் வரும் பாலியல் கோளாறுகள் காரணமாக இருக்கக்கூடும். இவர்களுக்குத் தேவைதிருமணம் அல்ல. மாறாகமனநல மருத்துவரிடம் சிகிச்சை.ஏனென்றால் பாலியல் கோளாரால் பாதிக்கப்பட்டவர்கள் உளநோயால் பாதிக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்கள் திருமணம் செய்துகொண்டு பிறரின் வாழ்வை பாழாக்குவது இப்போது அதிகரித்துக்கொண்டே வருகின்றது. கத்தோலிக்கத் திருமண நீதிமன்றங்களே இதற்கு மிகமுக்கியமான சாட்சியாகும். எனவே இப்படிப்பட்டவர்களை திருமணம் செய்துகொண்டு துன்புறுகின்றவர்கள் அந்தந்த மறைமாவட்டத்தில் அமைந்துள்ள கத்தோலிக்கத் திருஅவை நீதிமன்றங்களை அணுகி நல்லதீர்வை பெறமுடியும். உளவியல் சார்ந்த காரணங்களால் ஏற்படுகின்ற பாலியல் கோளாறுகள் பின்வருமாறு:

அ) ஆண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காத காமவேட்கை **(Satyriasis)**

ஆ) பெண்களிடத்தில் காணப்படும் கட்டுக்கடங்காத காமவேட்கை **(Nymphomania)**

இ) ஆண்களிடத்தில் காணப்படும் (ஓரின) தன்னினப் பாலுணர்வு **(Homosexuality)**

ஈ) பெண்களிடத்தில் காணப்படும் (ஓரின)தன்னினப் பாலுணர்வு **(Lesbianism)**

உ) துன்புறுத்தி இன்பம் அடைதல் **(Sadism)**

ஊ) துன்புற்று இன்பம் அடைதல் **(Masochism)**

எ) சிறுவர் மீதுகாமவேட்கை **(Pedophilia)**

ஏ) மிருகங்களைப் புணர்ந்துமகிழ்தல் **(Bestiality)**

ஐ) சடலத்துடன் புணர்தல் **(Nacrophilia)**

ஒ) பிறபாலின உடை அணிந்து மகிழ்தல் **(Transvestism)**

ஓ) பிறபாலினத்தவராக மாற விரும்புதல் **(Transsexualism)**

மேற்கண்டபாலியல் கோளாறுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் நோயாளிகளாக கருதப்பட வேண்டும். திருமணத்தின் இன்றியமையாத கடமைகளைப் புரிந்து ஏற்று, அதை நிறைவேற்றும் ஆற்றல் உடையவர்கள் மட்டுமேதிருமணம் செய்யும் தகுதியுடையவர்கள். திருமணத்தின்போது கொடுக்கப்படும் சம்மதம் மிகவும் முக்கியமானது. ஆனால், அதற்குப்பின் வாழும் திருமணவாழ்வும் முக்கியமானது. எனவே, ஒருநாளில் கொடுக்கப்படும் சம்மதத்தைவிட வாழ்நாள் முழுவதும் அந்தசம்மதத்தின் அடிப்படையில் திருமணத்தின் இன்றியமையாதக் கடமைகளை ஏற்று அதனை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாதவர்கள் கத்தோலிக்கத் திருஅவையைப் பொறுத்தவரையில் திருமணம் செய்யும் தகுதியில்லாதவர்கள். எனவே, மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செய்யாதிருப்பதே நல்லது.

அறம் பழகுவோம் [தொடர்]

# 10. கற்போம் அன்பின் இறையியல்

## திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையும் பாதையும்

அருள்பணி. ம.டைட்டஸ் மோகன்

நம் இதயத்திலும் வரலாற்றிலும் தீமை எதிர் மறை இடைவெளிகளை திறக்கிறது. ஆனால் அன்பு மட்டுமே வெற்றிடத்தை நிரப்புகிறது. அன்பால் மட்டுமே இதைச் செய்யவும் முடியும். இது கடவுளின் மகிழ்ச்சி. நம் இதயத்தில் கருணை இல்லை என்றால், மன்னிப்பதில் மகிழ்ச்சி இல்லை என்றால் நாம் கடவுள் தந்த அனைத்து கட்டளைகளையும் கடைபிடித்தாலும் நாம் கடவுளுடன் ஒற்றுமையாக இல்லை. கட்டளைகளை மட்டும் நடைமுறைப்படுத்துவதில் அல்ல, அன்பே காப்பாற்றுகிறது. கடவுள் மற்றும் அயலார் மீதுள்ள அன்பு தான் எல்லா கட்டளைகளையும் நிறைவேற்றுகிறது. (திருத்தந்தை பிரான்சிஸ், மூவேளை செபம் - செப்டம்பர் 15, 2013).

இரகசியங்களைக் கடந்த ஆச்சரியங்களைக் கண்டு கொண்டிருக்கும் செயற்கை நுண்ணறிவு யுகத்தில் கடவுள், இறைநம்பிக்கை, ஆன்மீகம், இறையியல் தத்துவங்கள் எல்லாம் காலம் கடந்தவை, தேவையற்றவை என்கிற நிலைக்கு இளவல்கள் பலரும் வந்துவிட்ட சூழலைக் காண முடிகிறது. தினமும் கோவிலுக்குப் போ என்றால், ஏன் வீட்டிலிருந்து கடவுளைக் கும்பிட்டால் போதாதா, கொரோனா காலத்தில் அப்படித்தானே செய்தோம் என்கிறதாக ஒரு கூட்டமும், கடவுளை நம்பாத நாத்திகன் கூட நன்றாய் வாழ்கிறானே, அப்படியிருக்க கடவுள் நம்பிக்கை கட்டாயம் தேவையா? என்பதாய் மற்றொரு கூட்டமும் உலா வருகிறது. இறையியல் என்ன பெரிதாகச் செய்து விடப் போகிறது என்பதுமான கேள்விகள் மடைதிறந்த வெள்ளம்போல் இளவல்களிடம் புரண்டோடிக் கொண்டிருக்கின்றன. இது இறையியலை வாழ்விலிருந்து பிரித்துப் பார்க்கும் தவறான அணுகுமுறையால் ஏற்படுவதே. இந்நிலையில் உண்மையான இறையியல் அணுகுமுறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்கிற புரிதலை திருத்தந்தையின் பார்வையில் புரிய முயற்சிப்போம்.

**வாழ்வுக்கான வாழ்விக்கும் இறையியல்**

இறைவன் மனித குலத்திற்கு தந்திருக்கும் மிகப்பெரிய கொடை இறைநம்பிக்கை. (இறைநம்பிக்கை ஒளி. எண் : 1) அந்த நம்பிக்கையே நமக்கு வாழ்வு. அதுவே செயலில் வெளிப்படுகிறது (யாக். 2:14-18). இயேசு கிறிஸ்துவும் தம்மைப்பற்றி, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் உலகிற்கு ஒளியாக வந்தேன் (யோவா. 12:46) என்கிறார். நாம் நம்பிக்கையில் வாழ, நம்பிக்கை விழுமியங்களை அன்றாட செயல்பாடாக்கி ஒளியில் நடக்க, வாழ்வில் இறைதிருவுளம் அறிந்து செயல்படும் முறையே இறையியல வடிவமாகிறது. எனவே திருஅவை கற்பிக்கும் இறையியல் என்பது வாழ்வு மாற்றமாக, அடையாளமற்றவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதாக, அடிமை நிலையிலிருப்போரை விடுவிப்பதாக, நோயுற்றோரை குணப்படுத்துவதாக, வறுமையை ஒழிப்பதாக, அகதிகளை அரவணைப்பதாக, சாதீய வேறுபாடுகளை வேரறுப்பதாக, (லூக். 4:18-19) காலம், இடம், சூழலுக்கு ஏற்ப உருவாக்கமும் உருமாற்றமும் பெறுகிறது.

இயேசு விட்டுச்சென்ற நற்செய்தி, அந்நற்செய்தி விழுமியங்களில் திருஅவை கற்றுத்தரும் படிப்பினைகள், புனிதர்களின் வாழ்வு முறைகள், நாம் கொண்டாடும் வழிபாடு... இவை யாவுமே ஆண்டுகள் பல கடந்தாலும், நாம் அறிந்து, அனுபவித்து, அறிவிக்கவே காந்தியடிகள் இவ்வுண்மையை அனுபவத்தில் உணர்ந்தபோது, இயேசுவின மலைப்பொழிவு எனது இதயத்தை ஊடுருவிப் பாய்ந்தது. இதுவே என்னை இயேசுவை நோக்கி இழுத்துச் சென்றது. இஃது ஒவ்வொருவரின் வாழ்விலும் வாழ்வளிப்பதால் அதனை கற்றுக்கொள்வதும், கடைப்பிடிப்பதும், பறை சாற்றுவதும் அனைவரின் கடமை. **அவ்வகையில்....**

* சிலருக்கானது என்றிருந்த இறையியல் கற்றலை மற்றும் கற்பித்தலை ஆர்வமுள்ள அனைவருக்குமானதாக, திருமுழுக்கு பெற்ற அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய தொன்றாக மாற்றிய பெருமை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மகத்துவங்களில் ஒன்று.
* கடவுள் பற்றிய போதனை புலன்களுக்கு அப்பாற்பட்ட கடவுளைப் பற்றியது என்பதைவிட கடவுள் மனிதகுலத்துடன் கொண்டுள்ள தொடர்பை மையப் படுத்தியது. இறை-மனித

உறவின் சங்கமம் என்பதே பொருத்தமானது. இது அன்றாட வாழ்வில் நிகழும் அற்புதம்.

* அருள்மேய்ப்பர்கள், இறையியலாளர்கள் ஆகியோரின் சிந்தனை திருஅவைக்கு உண்மையுடைமை, நேர்மை, மெய்ம்மைச் சார்பு, படைப்பாற்றல் போன்றவற்றைக் கொண்டிருப்பதால் நாம் அதிகத் தெளிவைப் பெற உதவும். (அன்பின் மகிழ்ச்சி, எண் : 2).

**இறையியல் கற்பித்தல் திருஅவையின் பணி**

இறையியலை வாழ்வியலிலிருந்து ஒரு போதும் நாம் பிரிக்க முடியாது. வாழ்வியலிருந்து இறையியல் பிறப்பதும், இறையியலிலிருந்து வாழ்வியல் சிறப்பதும் நாணயத்தின் இரு பக்கங்களே. அன்றாட வாழ்வின் சவால்கள், சறுக்கல்கள், சாதனைகள், வேதனைகளுக்குப் பதில் கொடுப்பதே இறையியலின் நோக்கம். கடந்த ஜுன் 14, 2024 இத்தாலியில் நடைபெற்ற ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்ற உலகத் தலைவர்களுக்கு வழங்கிய உரையில் நுண்ணறிவு மற்றும் அதன் நிகழ்காலம் சந்தித்து வரும் முக்கிய சவால் நிறைந்த செயற்கை நுண்ணறிவு மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து தனது சிந்தனைகளை பகிர்ந்து கொண்டது இதற்கொரு உதாரணம்.

கடந்த மே 10, 2024 அன்று கத்தோலிக்க இறையியலுக்கான சங்கங்களின் அனைத்துலக உறுப்பினர்களை திருப்பீடத்தில் சந்தித்தபோது இறையியல் கற்பித்தலின் முக்கியத்துவம் குறித்து திருத்தந்தை கூறியதாவது; நமது இறை நம்பிக்கைக்கான காரணத்தைக் கேட்பவர்களுக்கு அதனை விளக்குவது நமது கத்தோலிக்க நம்பிக்கையின் ஒரு பகுதியாக இருப்பதால், இறையியல் என்பது உண்மையில் ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் அவசியமான திருஅவையின் சேவையாக அமைந்துள்ளது. இந்நம்பிக்கை ஒரு உணர்ச்சி அல்ல, மாறாக இயேசு கிறிஸ்து என்கிற இறைமனிதர் மீதானது. பல்வேறு மக்கள், மொழிகள் மற்றும் கலாச்சாரப் பின்னணிகள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதால் பெருகிய முறையில் பல இன மற்றும் சமூகங்களில் நாம் அனுபவிக்கும் சகாப்த மாற்றங்கள் காரணமாக மனித சகோதரத் தவத்தை வளர்ப்பதற்கும், படைப்பின் மீது அக்கறை கொள்வதற்கும், விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்வதற்கும் இறையியல் முக்கியமானதாக அமைந்துள்ளது.

அப்படியெனில் பல்வேறு கலாச்சாரங்களுக் கிடையே மோதல்கள் இல்லாமல், உரையாடலில், ஒன்றிப்பை பிற விமர்சனத் துறைகளுக்கு ஒரு துணையாக இறையியல் இருக்க வேண்டும். காரணம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தால் ஏற்படும் சவால்களைச் சந்திக்க நமக்கும் இறையியல் அவசியமானதாக இருக்கின்றது. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மனிதனாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றிய பொதுவான புரிதலை நோக்கி நாம் பணியாற்ற வேண்டிய தேவையுள்ளது. இதன் அடிப்படையில் இறையியலுக்கு மூன்று வழிகாட்டுதல்கள் தேவைப்படுகிறது என்றார் திருத்தந்தை..

1. பாரம்பரியத்திற்கு ஆக்கபூர்வமான விசுவாசம் **(creative fidelity to tradition).**
2. ஒரு குறுக்கு-ஒழுக்க அணுகுமுறை **(a cross-disciplinary approach)**
3. கூட்டுரிமை **(collegiality and synodality)**

**அன்பின் இறையியல்**

மேற்காணும் மூன்று படிநிலைகளையும் சாத்தியமாக்க நமக்கு என்ன தேவை? அன்பு, அன்பு, அன்பு ஒன்றே! காரணம். அன்புள்ள இடத்தினிலே இல்லை வம்பு; அன்பில்லா வாழ்க்கையிலே ஏது தெம்பு. எனவே திருத் தந்தையின் பார்வையில் இறையியலின் சேவை என்பது இறையியலின் அறிவார்ந்த தன்மையை மீட்டெடுக்காமல் **(the sapiential character of theology)** மேற்கொள்ள முடியாது. நம்பிக்கையையும், நல்லொழுக்கத்தையும், விமர்சன ரீதியான பகுத்தறிவையும் அன்பையும் ஒருங்கிணைக்கும் ஞானத்தின் வெளிச்சத்தில் அறிவைப் பின்தொடர வேண்டும். எனவே ஒரு அறிவார்ந்த இறையியல் அன்பின் இறையியலே **(A sapiential theology is thus a theology of love).** ஏனென்றால் அன்பு செய்யாதவன் கடவுளை அறியமாட்டான். ஏனென்றால் கடவுள் அன்பாயிருக்கிறார். அன்பே கடவுள்.

இங்ஙனம் திருத்தந்தையின் பாணியில் உண்மை இறையியல் பார்வை மனிதர்களின் உறுதியான வரலாற்றில் கடவுள் உரையாற்றும் வார்த்தையை கையகப்படுத்துவதை நேரடியாக இலக்காகக் கொண்டுள்ளது. அதாவது வேருக்கு நெருக்கமாக உள்ளது. மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் எதிரொலிக்கும் கடவுளின் உயிருள்ள வார்த்தை, மனித வார்த்தைகளை எவ்வாறு ஊக்கப்படுத்துகிறது மற்றும் கடவுளைப் பற்றிய வார்த்தைகளாக அவற்றை எவ்வாறு ஒழுங்காக சீரமைக்கிறது என்பது இன்னும் தெளிவாகத் தெரிகிறது. உண்மையில், ஒரு குழந்தை கடற்கரையில் உள்ள மணலில் தனது வடிவத்தால் ஈர்க்கப்படுவதுபோன்று இறையியல் என்பது கடவுளைப் புரிந்துகொள்ளும் ஒரு மனித தாக்கம் அல்ல. மாறாக சூரியனின் வெப்பத்தைப் பொறுத்து ஒரு மலர் திறந்து மூடுவது போல, மனித வடிவத்தில் வெளிப்படும் கடவுளின் வார்த்தையே இறையியல்.

# 11. புற்றுநோய்... சந்தேகப் படுவோம்...

அருள்பணி. சார்லஸ் விஜு A.
இயக்குநர், புனித சவேரியார் பல்நோக்கு மருத்துவமனை, சுங்கான்கடை

அன்பு நிறைந்தவர்களே, வணக்கம்

எல்லோரும் வாழ்வை நிறைவாகப் பெறவேண்டும் என்பதே இறைமகன் இயேசுவின் வருகையின் நோக்கம். அவசரம் நிறைந்த உலகத்திலே நிறைவாழ்வைப் பெறுவதற்கு நாம் பல திசைகளில் ஓடிக்கொண்டிருக்கின்றோம். நமது இந்த பயணத்தில் தடைக்கல்லாய் நம்மை அச்சுறுத்துவது நோய்கள். இன்று வாழ்வை அச்சுறுத்தும் ஒரு நோயாக புற்றுநோய் வளர்ந்து வருவதை நாம் காண்கின்றோம். ஏன் இந்த நோய்? இதன் கொடூர முகம் ஏன் இவ்வாறு இருக்கின்றது? எங்கே சென்றால் நிரந்தர தீர்வு கிடைக்கும்? என்ற கேள்விகளெல்லாம் ஒருபுறம் இருக்க, இந்த நோயை எவ்வாறு எதிர்கொள்வது என்பது ஒரு சவால் நிறைந்த ஒன்று.

தாமதம்.. விபரீதம்

புற்றுநோய் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் இன்று கூட்டநெரிசல் அதிகரித்து வருகின்றது. புற்றுநோயாக இருக்குமோ! என்ற சந்தேகம் வந்ததும் மருத்துவமனை சென்றாலும், கூட்ட நெரிசல் காரணமாக 1 மாதம் கழித்துதான் மருத்துவரைச் சந்திக்க முடியும் என்று சொல்லப்படுவதால், நாள்கள் கடந்து அங்கு செல்கையில், நோயின் வீரியம் அதிகமாகி இறப்பு நேரிடுவதைக் கண்கூடாய்க் காண்கின்றோம்.

புற்று நோயில் பல நிலைகள் உள்ளன. முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் இந்த நோயின் செயல்பாட்டைத் தடுக்கமுடியும். நோயாளியைக் காப்பாற்ற முடியும். ஆனால் அடுத்தநிலைகளில் இந்நோயின் வீரியம் என்பது அதிகமாக இருக்கும். முழுமையான தீர்வு என்பது எட்டாக்கனியாகிவிடும். எனவே ஆரம்பநிலையிலே கண்டறிதல் என்பது ஒரு கட்டாயமாக இருக்கின்றது. ஆரம்பநிலையில் கண்டறிய என்ன செய்யலாம்?

சந்தேகப்படுவோம்

புற்றுநோயை எதிர்கொள்ளும் ஒரு முக்கிய வழி சந்தேகப்படுதல். சந்தேகப்படுதல் என்பது நமது உறவுமுறைகளில் தவிர்க்கவேண்டிய ஒன்று. ஆனால், புற்றுநோய் என்று வருகின்றபோது எதையும் சுலபமாக எடுத்துக்கொள்ளும் நிலை கடந்து சந்தேகப்பார்வையுடன் நம் உடலின் மாற்றங்களைப் பார்க்கும் பார்வை வேண்டும்.

சில எச்சரிக்கை அறிகுறிகள்:

ஆறாத புண்கள், வழக்கத்திற்கு மாறான இரத்தக்கசிவு அல்லது இரத்தப்போக்கு, மார்பகத்தில் அல்லது உடலில் பிற இடங்களில் ஏற்படும் கட்டி, உணவு செரியாமை

அல்லது உணவை விழுங்குவதில் ஏற்படும் சிரமம், மலம், சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் மாற்றம், மரு அல்லது மச்சத்தில் ஏற்படும் மாற்றம், குரலில் ஏற்படும் மாற்றம், தொடர் இருமல் அல்லது குரல் கம்மல், காரணம் இல்லா உடல் எடைகுறைவு இப்படிப்பட்ட எச்சரிக்கை அறிகுறிகளை சுலபமாக எடுத்துவிடக் கூடாது. இவைகள் ஒருவேளை புற்றுநோயாக இருக்குமோ? என்ற சந்தேகம் தான் இந்நோயிலிருந்து நம்மைக்காக்கும் முதல் வழி. ஒரு நோயாளியோடு சேர்ந்து ஒரு குடும்பம் முழுவதுமே துன்பத்தில் ஆழ்கின்றது. உடல்வேதனை, அச்ச உணர்வு, எதிர்கால பயம், குழந்தைகளின் எதிர்காலம் இவ்வாறு ஒரு புற்றுநோயாளி தினம் தினம் கவலையில் கடந்து செல்கின்றார். இந்நோய் பற்றி அடுத்த இதழில் இன்னும் ஆழமாக சிந்திப்போம்.

தொடர்கதை - 116

# 12. திசை மாறியப் பயணம்

தமிழறிஞர், புலவர்.மு.அருளப்பன்

''தம்பி மகிழன், குழந்தைகளோடு பேசிக்கிட்டும், கதைகள் சொல்லியும், நேரத்தைக் கழிக்கிறீங்க. எப்படி சந்தோஷமா இருக்கிறீங்க இல்லே" என்று மகிழனிடம் கேட்டார் மைக்கேல் தாஸ்

"ஆமாங்க சந்தோஷமாகத்தான் இருக்கேன். நாம் செய்யாத குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டு சிறையில் வச்சு சந்தித்தோம். அதுமுதல் நாம நல்ல நட்பு வட்டத்துல இருந்து பழகிக்கிட்டு இருக்கோம். அதுலயும் நீங்க ஒரு ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர். நான் ஒரு பட்டதாரி இளைஞன்" என்று மகிழன் சொல்லவே, "உண்மைதான் தம்பி, நல்ல நட்புக்கு வயது வித்தியாசம் கிடையாது. உண்மையான அன்புதான் அதை உறுதிப் படுத்தும்" என்றார் மைக்கேல்தாஸ்.

''அய்யா! உங்க வீட்டில நான் தங்கியிருக்கேன். உங்களோட வீட்டுப் பிள்ளைகளும், பக்கத்து வீட்டுப் பிள்ளைகளும் நல்லவங்களாக இருக்கிறதங்க. பெரியவங்களை மதிப்பதிலும், கீழ்ப்படிதலிலும் என்னோட மனசை கொள்ளை கொண்டுட்டாங்க" என்றான் மகிழன்.

"ஆமா தம்பி, இந்த புள்ளைங்களை கிறிஸ்தவ கண்ணோட்டத்துல வளர்த்து, எல்லோரையும் மதிக்கவும், மற்றவங்களோட அன்புடன் வாழணும்கற நல்ல மதிப்பீடுகளை வீட்டிலேயும், ஆலயத்திலும் கத்துக் கொடுக்கிறாங்க. அதனால இந்த பிள்ளைகள் நல்ல பிள்ளைங்களாக வளர்ந்தும், பள்ளிக்கூடம் போய் படிச்சும் வறாங்க" என்றர் மைக்கேல்தாஸ்.

''மகிழ்ச்சி அய்யா, விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்கிறது போல உங்க பேரக்குழந்தைகள் சின்ன வயசிலேயே ஞானத்திலும், அன்பிலும் நல்ல பண்பாடுகளிலும் சிறந்து விளங்குறாங்க" என்றான் மகிழன்.

"அது சரி தம்பி எங்க வீட்டில உங்களுக்கு ஏதாவது குறைகள் இருக்கா? ஏதாவது தேவைப் படுதுன்னா கூசாமல் கேட்டுக்கோங்க. ஏன்னா இது உங்களோட வீடு மாதிரி'' என்றார் மைக்கேல்தாஸ்.

அதைக் கேட்டதும் சிரித்துக்கொண்டே மகிழன், "அய்யா அப்படியெல்லாம் ஒரு குறையும் இல்லீங்க. ஆனால் சிறைவாழ்க்கை முடிஞ்சதும் உங்களோடு நேராக இந்த உங்க வீட்டுக்கு வந்து வெட்டியா தங்கியிருக்கேன். அடுத்த கட்டமா ஏதாவது வேலை பார்த்து போகணும் இல்லையா?" என்று சற்று தயக்கத்துடன் மகிழன் தெரிவித்தான்.

அதைக்கேட்டதும் பலமாக சிரித்த மைக்கேல்தாஸ், ''தம்பி இங்க நீங்க எங்க வெட்டியா இருக்கறீங்க. சிறையில் இருந்து வந்து ரெண்டு நாளுதானே ஆயிருக்கு. இந்த ரெண்டு நாளாக நீங்க சும்மா சோம்பேறியாக இருக்கலையே. என்னோட பேரக்குழந்தைகளுக்கு பாடங்களில் சந்தேகங்கள் சொல்லிக் கொடுப்பது, கதைகள் சொல்லிக் கொடுப்பதுன்னு நேரம் போகிறதே தெரியாமல் இருக்கீங்களே..." என்றார் மைக்கேல்தாஸ்.

"அது உண்மைதாங்க இருந்தாலும்..." என இழுத்தான் மகிழன்.

"தம்பி மகிழா உங்களோட மனநிலை எனக்குப் புரியுது. ஆனால் நீங்க ஒரு பெரிய தொழிலதிபரோட மகன். படித்த பட்டதாரி. அதனால உங்களை ஏனோதானோன்னு ஏதாச்சும் கடைகிடைன்னு வேலைக்கு கொண்டு சேர்க்க முடியாது. மட்டுமல்ல உங்களோட பெற்றோர்கிட்ட உங்களை சேர்க்கணும். இப்படி நான் யோசிச்சுக்கிட்டுதான் இருக்கிறேன். அதனால கொஞ்சநாள் கூட பொறுத்துக்கிடுங்க" என்றார் மைக்கேல்தாஸ்.

அப்போது கட.. கட.. கட.. என ஒலி எழுப்பியவாறு புகைவண்டி தொடர்போல மைக்கேல்தாசின் வீட்டுக் குழந்தைகள் அங்கே வந்தார்கள்.

"அங்கிள்...! அங்கிள்...!" என கூறியவாறே குழந்தைகள் வந்ததும் அங்கே கலகலப்பு ஏற்பட்டது.

வாங்க... வாங்க... எனக் பிள்ளைகளை வரவேற்று அரவணைத்தவாறு, ''அய்யா, உங்களோட பேரக்குழந்தைகளோட இருக்கும்

போது நேரமே போவது தெரியாது” என்றான் மகிழன்.

“எப்படி பேராண்டிகளா? இந்த மாமாவை உங்களுக்கு புடிச்சிருக்கா?” என குழந்தைகளிடம் சிரித்தவாறு மைக்கேல்தாஸ் கேட்டார்.

“புடிச்சிருக்கான்னா கேக்கறீங்க, இவரு எங்களோட தங்க மாமா.. செல்ல மாமா... செல்ல மாமா...” என்று மாறி மாறி குழந்தைகள் தாத்தா மைக்கேல்தாசிடம் கூறியவாறு மகிழனை கைகளைப் பிடித்து தொங்கியும், கட்டிப்பிடித்தும் விளையாடினாங்க.

“சரி சரி நீங்க விளையாடுங்க” என்று கூறியவாறு மைக்கேல்தாஸ் அங்கிருந்து சென்றார்.

‘‘மகிழ்ச்சி நீங்க ஒவ்வொருத்தரும் அன்புடனும் நட்புடனும் இருக்கிறதைக் காண சந்தோஷமாக இருக்கு’’ குழந்தைகளிடம் கூறினான் மகிழன்.

“அது சரி அங்கிள், நட்புன்னா என்ன?” என்று கவிதா கேட்டாள்.

“நட்புன்னா உளப்பூர்வமாக அன்புடன் பழகுறது. நண்பர்கள் இன்பத்திலும், துன்பத்திலும், மகிழ்ச்சியிலும் பகிர்ந்து வாழ்ந்து ஒருவருக்கொருவர் துணையாக இருப்பது.” இதை ஒரு சிறிய குட்டிக்கதை மூலம் உங்களுக்கு சொல்றேன்.

“ரெண்டு நண்பர்கள் காட்டுல நடந்து போய்க்கிட்டிருந்தாங்க. அப்ப திடீர்னு ஒரு கரடி வந்தது. கரடியைக் கண்டதும் ஒரு நண்பன் தன்னோடு வந்த நண்பனைப் பற்றி யோசிக்காமல் அங்கு நின்ற ஒரு பெரிய மரத்துல ஏறி உயிர்பிழைத்தான். அவனுக்கு மரம் ஏற தெரிஞ்சதுனால மரத்துல ஏறி உயிர் பிழைத்துக் கொண்டான். பாவம், அவனுடன் போன நண்பனுக்கு மரம் ஏற தெரியாது. அதனால அவன் பயத்தால் நடுங்கினான். திடீர்னு அவன் கீழே தலையில் மூச்சைப் பிடிச்சிக்கிட்டு உயிரில்லாதவன் போல படுத்துக் கொண்டான். கரடி வந்தது அது படுத்திருந்தவனின் முகம், மூக்கு, மற்றும் காதில் மோப்பம் பிடிச்சிக்கிட்டு ஆள் இறந்து கிடப்பதாக நெனச்சி போனது. அதுக்கப்புறம் மரத்திலிருந்து நண்பன் கீழே இறங்கி வந்தான்.”

“அவன் படுத்துக்கிடந்த நண்பனிடம், ஆமா! அந்த கரடி உன்னோட காதுல என்ன ரகசியம் பேசிச்சுன்னு கேட்டான். அவன் சொன்னான் ஆபத்து காலத்தில் உதவாத நண்பனோடு உறவு கொள்ளக்கூடாதுன்னு சொல்லிச்சு. அதைக் கேட்ட மரத்தில் ஏறிய நண்பன் தன்னோட தவறை உணர்ந்தான். அப்ப திரும்பவும் கரடி வந்தது. இப்ப மரத்தில் ஏறிய நண்பன் உயிர் பிழைக்க மரத்தில் ஏறாமல், அருகில் கிடந்த பெரிய கம்பை எடுத்து கரடியை வீரத்துடன் துரத்தினான். அதுபோல படுத்துக்கிடந்த நண்பனும் செய்தான். ரெண்டு பேரும் வீரத்தோடு போராடி கரடியை விரட்டி, ஒருவருக்கொருவர் உயிர் காத்தனர்” என மகிழன் கூறி முடித்தான்.

“கதை எப்படி“ என்று குழந்தைகளிடம் கேட்டான்.

“நல்ல கதை அங்கிள்” என்று குழந்தைகள் கூறினார்கள்.

“பார்த்தீங்களா? துன்பம் வரும்போது ஓடி ஒளிவது நட்புக்கு அடையாளம் இல்லை. நண்பர்களின் துன்ப துயரத்தை உயிர் கொடுத்தேனும் காக்க வேண்டும். அதுபோல நீங்களும் நல்ல நண்பர்களாக பழகி வாழணும்” என்றான் மகிழன். - பயணம் தொடரும் -

அடுத்த இதழ் **(அன்னை மரியா விடுதலையின் தாய்)** என்றச் சிந்தனையில் மலர இருக்கின்றது. உங்களது படைப்புகள், கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை 05-08-2024-ம் தேதிக்குள் அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறந்தப் படைப்புகள் இதழில் பிரசுரிக்கப்படும்.

**ஆசிரியர்,**
**புதிய தேடல்.**

# 13. நட்பும் மகிழ்வும் நல்கும் திருப்பலி

அருள்பணி. ம. காட்வின் ராஜ்

சில நேரங்களில் அறிவியலும் சமயமும் கைகோர்த்தும் மற்றும் ஒருசில வேளைகளில் விஞ்ஞானமும் மெய்ஞானமும் ஒன்றையொன்று விலக்கி குறைபட்டுக் கொள்ளும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் வாழும் இவ்வுலகில் ஒவ்வொரு மனிதரையும் தாண்டிய ஓர் ஆற்றல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது கோடானு கோடிபேரின் அனுபவமாகும். இதையே அறநெறி சமயத்தில் கடவுள் என்கிறோம். தன்னைக் கடந்தும் தனக்குள்ளும் வாழுகின்ற கடவுளை அடைய , அனுபவமிக்க மனிதன் கொண்டாடும் அடையாளங்களையே திருவழிபாடு என்கிறோம். கத்தோலிக்க நம்பிக்கை பாரம்பரிய திருவழிபாட்டின் ஊற்றும் சிகரமுமான திருப்பலி எவ்வாறு நமக்கு நலமான நட்பும் மகிழ்வான வாழ்வும் தருகிறது என்று இக்கட்டுரையில் காண்போம்.

**நலமான நட்பு**

நலமான நட்பு என்பது எல்லோரும் இன்புற்று வாழ்தல் என்ற உயர் எண்ணத்தின் வெளிப்பாடே ஆகும். எல்லோரும் எல்லாம் பெற்று அன்புறவுடன் வாழ தடையாக இருப்பது தன்னலமே. தன்னைப்போல பிறரையும் காண எல்லோரும் முன்வர வேண்டும். தன் நண்பருக்காக உயிரைக் கொடுப்பதே சிறந்த அன்பு (யோவான் 15:13) என்று கூறிய இயேசு உங்களை நான் என் நண்பர்கள் என்றேன் (யோவான் 15:15) என்றும் குறிப்பிடுகிறார். தன்னுடைய சீடர்களை நண்பர்களாக பாவித்த இயேசு உலகம் முழுவதையும் தன் நண்பர்களாக காண்கிறார். ஏனெனில் நட்பில் சுரண்டலுக்கு இடமில்லை. கத்தோலிக்க மைய வழிபாடாம் திருப்பலியில் இதை நாம் கொண்டாடுகிறோம்.

குறிப்பாக இங்கே பொறுமையாக்குதல், வெறுமையாக்குதல் என்று மொழிபெயர்க்கப்படும் **(Kenosis)** என்கிற கிரேக்கச் சொல் நம் சிந்தனையை தெளிவாக்குகிறது. தன்னை வெறுமையாக்கி தம் அயலாரை நிறைவாக்கும் செயலே அன்புப்பணி ஆகும். அதனை நிறைவேற்றியதே இயேசுவின் பணியாகும். தன்னை முற்றும் இழந்து உலகோரை வாழ்வுக்கு உயிர்த்தெழச் செய்த இயேசுவின் தியாகத்தை கொண்டாடுவதே திருப்பலி. திருப்பலியை கொண்டாடி அதில் பங்கேற்போர் அனைவரும் திருப்பலி வழங்கும் இத்தியாக சிந்தனையை வாழ்வாக்கினால் வாழும் சமூகங்களில் நலமான நட்பு பெருகும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பிறரை சுரண்டி தன்னை வளர்க்க அல்ல, மாறாக தன்னைக் கரைத்து பிறர் நலனுக்காய் தன்னை கையளிக்கத் தூண்டுவதே திருப்பலி ஆகும்.

**மகிழ்வான வாழ்வு**

"தீதும் நன்றும் பிறந்தர வாரா" என்ற கணியன் பூங்குன்றனாரின் படிப்பினைப் போல இன்பமும் துன்பமும் பிறர் தர வாரா என்பது நிதர்சனமான உண்மை. ஒருவரின் மகிழ்வான வாழ்வு என்பது அவரவர் உள்ளம் சார்ந்ததே. இயேசு குறிப்பாக சொல்கிறார், மிகுதியான உடைமைகளை கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது (லூக்கா 12:15). நம்முடைய இவ்வுலகம் போராட்டம் என்பது நமக்காகவும், வாரிசுக்காகவும் சொத்து சுகம் உருவாக்குவதிலேயே பறந்தோடி விடுகிறது. இதனிடையே கொஞ்ச நேரம் மன அமைதிக்காகவும், மகிழ்விற்காகவும் ஆலயம் தேடிவரும் மனிதர்கள் தங்களுடைய நல்வாழ்வையே மன்றாட்டுக்களாக முன் வைக்கின்றனர். பொதுநலக் குறைபாடுகளும் அன்புப் பணிகளில் சிதைவும் உள்ள மனப்பாங்குகள் மகிழ்வான வாழ்வுக்கு ஒரு போதும் இட்டுச்செல்வதில்லை.

மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்த உணர்வு. அமைதி மற்றும் திருப்தி தரும் நிறைவு. எனவே மகிழ்ச்சிக்கான ஆதாரமே பிறரை நேசிப்பதிலும் பிறர் மீதான அக்கறையிலும் தான் அடங்கி இருக்கிறது. தன்னைத்தான் நேசிப்பது போல பிறரையும் நேசிப்பதில் தான் மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. ஒவ்வொரு வழிபாடும் இதை நமக்கு நினைவு படுத்துகிறது. ஒருவர் மற்றவருக்காக இறைவேண்டல் செய்யத் தூண்டுவதே திருப்பலி. தனக்காக தன் நலனுக்காக அல்ல, மாறாக பிறருக்காக பிறரின் நல்வாழ்வுக்காக இறைவேண்டல் செய்வதிலே உள்ளத்தின் ஆழத்தில் மகிழ்வு பிறக்கிறது. பிறர் காயம் ஆற்றி பிறர் மனம் மகிழச்செய்வதிலே நம் மனம் நிறைவு பெறுகிறது.

இறைவழிபாடு என்பது எந்நேரமும் நமக்கு நன்மைகள் செய்யும் இறைவனை புகழ்வதே ஆகும். இப்புகழ்ச்சி நிறைவடைவது என்பது நாம் பிறருக்கு நன்மை செய்வதிலே அடங்கியிருக்கிறது. தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்வதிலே நலமான நட்பும், மகிழ்வான வாழ்வும் துளிர் விடுகிறது. இதற்காகவே மனிதராக பிறந்து பாடுகள் அனுபவித்து, இறந்து, உயிர்த்தெழுந்த கிறிஸ்து நமக்கு முழுமுதல் முன்மாதிரி ஆகிறார். பிறரன்புப் பணிகளால் நாம் கொண்டாடும் திருப்பலி அர்த்தம் பெறுகிறது. நம் வாழ்வு நிறைவு கெறுகிறது.

பசுமை பக்கம்

# 14. இன்றைய காலநிலை மாற்றம்



பசுமைச் சாம்பியன்,
Agri. Dr. ஒய். இராஜகுமார்.

இவ்வுலகம் உருவான காலகட்டம் முதலே காலநிலை மாற்றம் என்பது நிகழ்ந்து வந்தாலும், மனிதன் தன் சுய தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இயற்கையினை அதிகப்படியாக முறையின்றி பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து, காலநிலை மாற்றத்தின் வேகம் பல மடங்கு அதிகரித்துள்ளது. இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான சவால்களில் ஒன்றாக காலநிலை மாற்றம் உருவெடுத்து விட்டது. அதோடு அது அனைத்து துறைகளிலும் குறிப்பாக வேளாண்மைத் தொழிலில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

காலநிலை மாற்றம் என்பது வானிலை காரணிகள், அதன் இயல்பு நிலையிலிருந்து திரும்பி மீண்டும் திரும்பிவரா நிலைக்கு மாற்றம் அடைவதாகும். காலநிலை மாற்றமும் வேளாண்மையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையதாகும். கால்நடை பெருக்கமும் காலநிலை மாற்றத்திற்கு கணிசமாக பங்களிக்கிறது. காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகள் வேளாண்மையை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கின்றன. இதன் மோசமான விளைவுகள் இன்றைய உலகம் முழுவதும் பரவலாகக் காணப்படுகிறது.

தொடர் வானிலை மாற்றங்களால் பனிமலைகள் உருகுதல், கடல்மட்டம் உயருதல் போன்ற முக்கிய நிகழ்வுகள் ஏற்படுகிறது. தற்போது காலநிலை மாற்றத்தின் கோரக் காட்சிகள் வெளிப்படையாகத் தெரிய தொடங்கி விட்டன. குறிப்பாக அதிகரித்துவரும் வெப்பநிலை, குறுகிய நேரத்தில் கூடுதல் மழை, அதிகப்படியான வறட்சி, பல்லுயிர்த் தன்மை குறைதல், இயற்கை பேரழிவுகள், சூறாவளிக் காற்று, கடல் சீற்றம், பெருவெள்ளம் போன்றவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவை அனைத்தும் காலநிலை மாற்றத்தின் கடுமையான விளைவுகளாகும். வேளாண்மையில் காலநிலை மாற்றத்தின் முக்கியத்தாக்கம் வெப்பநிலை மற்றும் மழைப் பொழிவு முறைகளில் வெளிப்படும்.

இத்தகைய மாற்றங்கள் வறட்சி, வெள்ளம், வெப்பஅலை ஆகியவற்றுக்கு வழி வகுக்கும். இக்காரணிகள் பயிர்களைச் சேதப் படுத்துவது மட்டுமின்றி விளைச்சலையும் குறைக்கும். மேலும் பருவநிலை மாற்றம் பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களின் விரைவான பரவலுக்கு ஊக்கமளிக்கிறது. இதனால் வேளாண்மை உற்பத்தியில் வானிலையின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் நிலத்தில் வளரும் பயிர்களின் முழு உற்பத்தித் திறனைப்பெற தட்ப வெப்பநிலை சாதகமாக அமைய வேண்டும். அன்றாட வெப்பநிலை, காற்றின் ஈரப்பதம், மழை அளவு, நீர் ஆவியாதல், சூரிய ஒளி, காற்றின் வேகம், வீசும் திசை முதலியவற்றைக் கணக்கிட்டு வேளாண்மை உத்திகளைக் கையாளும்போது அதிகபட்ச உற்பத்தி திறனைப் பெறமுடியும்.

பொதுவாக வானிலை முன்னறிவிப்புகள் வேளாண்மையில் அன்றாடம் செய்யக்கூடிய வேலைகளைத் துரிதப்படுத்தவோ தள்ளிப்போடவோ உதவுகிறது. மழையினைப் பொறுத்து நீர் பாய்ச்சுதலைத் தள்ளிப்போடுதல், வானிலை மந்தமாக இருந்தால் நிலத்தை உழுதல் மற்றும் களை எடுத்தல், காற்றின் வேகம் மற்றும் மழை அளவைப் பொறுத்து பூச்சி மற்றும் நோய் மருந்துகளைத் தெளித்தல், மழையில்லா நாட்களில் அறுவடை மற்றும் உலர வைத்தலை மேற்கொள்ளுதல் ஆகியவை வானிலை சார்ந்த வேளாண்மையாகும். வானிலைக்கு ஏற்றாற்போல் பயிர் வகைகளை தேர்வு செய்வதன் மூலம் குறைந்த செலவில் அதிக வருமானத்தைப் பெற முடியும்.

வானிலை சார்ந்த தீர்வுகள் வேளாண்மையில் அதிக உற்பத்தி திறனுக்கும், அதிக லாபத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. இதற்கு மிகத்துல்லியமான வானிலை முன்னறிவிப்பு அவசியமாகிறது. வானிலை நிகழ்வுகள் மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டவையானாலும் வானிலை நிகழ்வுகள் குறித்த முன்கூட்டிய அறிவு வானிலை நிகழ்வுகளின் எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்கவும், பொருத்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மிகவும் உதவியாக இருக்கிறது. தற்போதைய துல்லியமான மேம்பட்ட வானிலைத் தகவல் தொழில்நுட்பங்கள் வானிலை முன்னறிவிப்பின் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிக அளவில் வழங்குகின்றன. எனவே விவசாயிகள் வேளாண் வானிலை சார்ந்த ஆலோசனைகளைப் பயன் படுத்தி, பாதிப்பு களிலிருந்து பயிர்களைப் பாதுகாத்து, உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்ளலாம்.

# 15. நல்ல நட்பு நல்ல மனித வாழ்வின் முன்னோடி

திரு. எஸ்.கே.ஜி. டோமினிக்,
நாச்சிவிளை.

தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு இல்லை என போதனை தந்து உண்மையான நட்புக்கு இலக்கணம் வகுத்தார் இறைமகன் இயேசு. நல்ல ஒரு மனிதன். தன் நண்பனின் நல்வாழ்விற்காக எதையும் செய்யவும், நண்பனுக்காக தியாகங்கள் பல செய்யவும் தயாராக இருப்பான். தன்னைத்தான் நேசிப்பது போல பிறரையும் நேசிக்க வேண்டுமென இறைமகன் இயேசு போதித்தார். ஆனால் சுயநலம் கொண்ட மனிதனால் தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசிப்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனால் உண்மையான நட்பு கொள்பவன் நண்பனை உண்மையாக நேசிக்கின்றான். நண்பனுக்கு தேவையான உதவிகளைச் செய்கிறான். நண்பனின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முயற்சிக்கிறான்.

உலகில் மனிதன் தனித்து வாழ முடியாது. அவனுக்கு தேவையான உதவிகளைச் செய்யவும், மனம் திறந்து பேசவும் அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண ஆலோசனைகள் வழங்கவும், ஒரு சிலரின் உதவி தேவைப்படுகிறது. அந்த ஒரு சிலரின் இடத்தை நிரப்புபவர்கள் தான் நண்பர்கள், நட்புக்கு இலக்கணமான நல்ல நண்பர்கள் இருந்தால் வாழ்க்கையில் வெற்றியின் பாதையில் நாம் எளிதாக பயணம் செய்யமுடியும். வாழ்வில் எதிர்பாராத சில பிரச்னைகளை சந்திக்கும் போது, உதவி எதிர் நோக்கி இருக்கும் போது தக்க சமயத்தில் வந்து தேவையான உதவிகள் செய்பவன் தான் நண்பன்.

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என்ற வள்ளுவர் வாக்குப்படி மனம் மகிழாமல் முகம் மட்டும் மலரும்படி நட்பு கொள்வது சிறந்த நட்பாகாது. அன்பால் உள்ளம் மலர, நட்பு செய்வதே சிறந்த நட்பு ஆகும்.

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி நண்பனாக நடித்து ஆசை வார்த்தைகள் கூறி நண்பனின் மனைவியை அபகரிப்பது நட்புக்கு விளைவிக்கும் களங்கம் ஆகும். இத்தகைய துரோகம் செய்பவர்களை நண்பன் என்ற பட்டியலில் சேர்க்க முடியாது. துரோகிகள் பட்டியலில் தான் சேர்க்க வேண்டும். கபட எண்ணத்துடன் சுய ஆதாயத்திற்காக நண்பனாக பழகி நண்பனை வஞ்சிப்பது மன்னிக்கமுடியாத பாவம் ஆகும்.

ஒருவனின் நண்பர்களைக் கொண்டு அவனுடைய குணாதிசயங்களை அடையாளம் கண்டு கொள்ளலாம். பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர், வகுப்பிலுள்ள சக மாணவ மாணவியருடன் பேசிப்பழக வேண்டியது அவசியம் என்றாலும் நல்ல பழக்கங்கள் கொண்ட, நல்ல எண்ணங்கள் கொண்ட மாணவ, மாணவியரை நண்பர்களாக தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறு செய்வது நல்ல ஒரு எதிர்காலத்திற்கு அடித்தளம் இடுவதில் உதவிகரமாக இருக்கும்.

நல்ல நண்பர்களை தேடி அலையும் போது, கூடவே நம்மை பிறருக்கு நல்ல நண்பர்களாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். நமது நட்பிற்காக பிறர் ஏங்க வேண்டிய நிலைமையை உருவாக்கிக் கொள்வதில் தான் நமது மகத்துவம் அடங்கியிருக்கிறது. நேசிக்கப்படுவதை விரும்புவதை விட, பிறரை நேசிப்பதை நமது கொள்கையாக நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால் அதற்கு நாம் தியாகங்கள் பல செய்ய வேண்டி இருக்கும். முதலில் தன்னை நேசிப்பது போல பிறரை நேசிக்கக் கூடிய மனநிலை உருவாக வேண்டும். அதுவும் உண்மையான, உறுதியான உள்ளத்துடன் பிறருக்கு நம்மால் என்னென்ன உதவிகள் தேவையோ அவற்றை செய்ய தயாராக வேண்டும். துயருற்றிருப்போரின் துயர்துடைக்க தயாராக வேண்டும். சரியான, கல்வியறிவு இல்லாதவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல் உதவி செய்யலாம். ஏழ்மையில் தவிப்போரின் துயர் துடைக்க, பொருளாதார ரீதியில் அவர்கள் முன்னேற வழிவகைகள் செய்து கொடுக்கலாம். வேலை வாய்ப்புகளை உருவாக்கி வேலைவாங்கிக் கொடுக்கலாம். வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பண மோசடி செய்யும் எண்ணம் கொஞ்சமும் வரக்கூடாது. மொத்தத்தில் உண்மையான உள்ளத்துடன் பிறர் நலனில் அக்கரையோடு ஈடுபட வேண்டும். பிறர் நலனில் அக்கரை கொண்டு அவர்களது முன்னேற்றத்தில் நமது பங்களிப்பை செய்யும்போது நாம் நல்ல நண்பர்களாக மட்டுமின்றி நல்ல மனிதர்களாகவும் திகழ்வோம் என்பது நிச்சயம்.

# 16. பணிக்குழுக்களின் அறிக்கை

## ஜூன் - 2024

01. கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

மறைக்கல்வி பணிக்குழு

- 08.06.2024 - முளகுமூடு, காரங்காடு, 15.06.2024 - மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட முதன்மைப் பணியாளர்கள், மறைமாவட்ட பணிக்குழு இயக்குநர், மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் உட்பட 51,59, 22 மறையாசிரியர்கள் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துரைகளுடன் மறையாசிரியர்கள் அர்ப்பணமிக்கவர்கள், மறையாசிரியரிடம் இருக்க வேண்டிய முதன்மைகள், ஆசிரியர் யார் என்ற சிந்தனைகளில் மறைமாவட்ட பணிக்குழு இயக்குநர் தந்தை V. பெனிட்டோ,வேதியர் விஜிலா ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றன.
- 09.06.2024 - மாத்திரவிளை, 30.06.2024 - புல்லாணி ஆகிய பங்குகளில் மறைக்கல்வியின் முக்கியத்துவம், தலைமைப்பண்பு, மறையாசிரியர் கடமைகள் என்ற சிந்தனைகளில் திருமதியாளர்கள் பிறீதா,ஜெனி, திருவாளர்கள் நெல்சன், ஜெயபிரகாஷ் மற்றும் வேதியர். விஜிலாஆகிய கருத்தாளர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 468 பேர் பங்கேற்றனர்.

திருவழிபாடு பணிக்குழு

- 17.06.2024 - ஆலயப்பணியாளர்களின் செயற்குழு கூட்டம்புனித செமாலை அன்னை ஆலயம் காஞ்சிரகோட்டில் வைத்து அருள்பணி. பெனிட்டோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆலயப் பணியாளர்கள் 12 பேர் பங்கேற்றார்கள்.

விவிலிய பணிக்குழு

- 20.06.2024 - மாத்திரவிளை மறைவட்ட செயற்குழு கூட்டமானது மறைவட்ட முதன்மை பணியாளர் அருள்பணி. பிளாரன்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது விவிலிய ஆண்டுவிழா. பற்றி பேசப்பட்டது. 20 பேர் பங்கேற்றனர்.

02. சிறார் பணிக்குழு

- 08.06.2024 - முளகுமூடு, 22.06.2024 - காரங்காடு, 30.06.2024 - மாத்திரவிளை ஆகிய மறைவட்டங்களில் வழிகாட்டிகள் கூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட முதன்மை பணியாளர்கள், மறைவட்ட இயக்குநர்கள், அருள்சகோதரர், களப்பணியாளர்கள், வழிகாட்டிகள் என 49, 29, 23 நபர்கள் பங்கேற்றனர்.

03. இளைஞர்பணிக்குழு

இளைஞர் • 16.06.2024 - புத்தன்கடை, முளகுமூடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. 16, 19 என்ற எண்ணிக்கைகளில் உறுப்பினர்கள் பங்கேற்றனர். சுற்றுசூழல் பாதுகாப்பதில் இளைஞர்களின் பங்குஎன்ற சிந்தனையில் திருமதி. ஜெனிஷா, செல்வன் அனிஷ்ஆகியோர் பயிற்சி வழங்கினார்கள். மாத்திரவிளை மறைவட்ட கையெழுத்து பிரதியை மணலிக்குழிவிளை கிளை "போதையில்லா உலகம்" என்ற தலைப்பில் வெளியிட்டனர்.

- 23 பங்குகளில் இயக்கம், இயக்க நோக்கம்என்ற சிந்தனையில் கிளை மாநாடுகள் நடைபெற்றன.
- சந்தித்த கிளைகள் - 32

இ.கி.மா/இ.மா இயக்கம்

- 16.06.2024 - காரங்காடு, முளகுமூடு, புத்தன்கடை, மாத்திரவிளை, 23.6.2024 - திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. 21,25,30,26,43 என்ற எண்ணிக்கைகளில் பங்கேற்றனர். இயக்கம், இயக்கமாதலின் தேவை, இலட்சியத்தை நிர்ணயிப்பதும் அதை அடைவதும், போதை, சுயவிழிப்புணர்வு, இன்றைய கல்விசூழல் என்ற சிந்தனைகளில் திரு. ராபர்ட் ஜினி, திரு. மார்சலின் பெனோ, திருமதி. லிசி ஆகியோர் பயிற்சி வழங்கினார்கள்.

இளைஞர், இ.கி.மா/இ.மா

இணைந்தசெயல்பாடுகள்:

- 30.06.2024 - இயக்கத்தில் உருவானவர்களையும், இயக்கத்திற்கு உரு கொடுத்தவர்களையும் ஊக்குவிக்கும் நோக்கில்

உறவுகளின் சங்கம விழா இ.கி.மா, இளைஞர் இயக்க தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது. 153 பேர் பங்கேற்று சிறப்பித்தனர், இயக்கத்தினால் உருவான ஆளுமைகளின் அனுபவப் பகிர்வும், இயக்கத்திற்கு உருகொடுத்தவர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றது. மேதகு ஆயர் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

04. பெண்கள் பணிக்குழு

- 29.06.2024 -காரங்காடு மறைவட்ட மாநாடு தச்சன்பரம்பு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. 68 நபர்கள் பங்கேற்றனர். மறைவட்ட முதல்வரின் ஆரம்பவுரையும் மறைமாவட்ட பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளரின் வாழ்த்துரையும் இடம்பெற்றன. மறைமாவட்ட செயலர் திருமதி. சுஜா ஜாஸ்மின் அவர்களால் "பெண்ணே உன் வலிமையை உணர்வாய்" என்ற சிந்தனையில் கருத்துரை வழங்கப்பட்டது.
- 26.06.2024 - போதை ஒழிப்பு தின ஆர்ப்பாட்டம் கன்னியாகுமரியில் வைத்து நடைபெற்றது. இதில் மாவட்ட அளவில் 85 நபர்கள் பங்கேற்றனர்.˙.

05. அன்பியம் பணிக்குழு

- காரங்காடு, திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி. ஆல்வின் விஜய் அவர்கள் ஊடகத்தை கையாளும் முறைகள் என்ற சிந்தனையிலும்,மாத்திரவிளை மறைவட்டத்தில் அருட்பணி. சுனில் அவர்கள் "ஊடக விழிப்புணர்வு" என்ற சிந்தனையிலும், வேங்கோடு மறைவட்டத்தில் அருட்பணி. அமல்ராஜ் அவர்கள் "போதை விழிப்புணர்வு" என்ற சிந்தனையிலும் பயிற்சிகள் வழங்கினார்கள்.

06. நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு

- மாதத்தின் முதல் வெள்ளி வெட்டுவெந்நி திருத்தலம், மேல்பாலை, வசந்தபுரம், மாதத்தின் நான்காவது வெள்ளி இருதயபுரம் ஆகிய பங்குகளிலும் நற்செய்தி கூட்டம் நடத்தப்பட்டது.
- 04,05.06.2024 ஆகிய நாட்களில் பரக்குன்று பங்கில் சிறப்பு நற்செய்தி கூட்டம் நடத்தப்பட்டது.

07. தொழிலாளர் பணிக்குழு

- 02.06.2024 - முளகுமூடு,23.06.2024 - புத்தன்கடை,காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் மறைவட்டகூட்டங்கள் நடைபெற்றன. மறைவட்ட நிர்வாகிகள்,களப்பணியாளர் உட்பட 25,10, 25 நபர்கள் பங்கேற்றனர்.

08. சமூகத்தொடர்பு பணிக்குழு

- 22.06.2024 - மாத்திரவிளை மறைவட்ட அன்பிய பணிக்குழு கூட்டத்தில் "ஊடக போதை" என்ற சிந்தனையில் மறைமாவட்ட பணிக்குழு செயலர் அருட்பணி. சுனில் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது.
- 19.06.2024 -நமது மறைமாவட்ட குருக்களுக்கான பொன்விழா, வெள்ளிவிழா நிகழ்வுகளின் புகைப்படங்களுடன் கூடிய 5 நிமிட பாடல் தயாரித்து நமது மறைமாவட்ட தேனருவி Youtube channel-ல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

09. தலித் பணிக்குழு

- 08.06.2024 - குலசேகரம், திரித்துவபுரம், 22.06.2024-முளகுமூடு, 23.06.2024-காரங்காடு, 25.06.2024 - மாத்திரவளை ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டத்திற்கு 9,15,21, 15, 11 என்ற எண்ணிக்கையில் பங்கேற்றனர்.

10. சிறை பணிக்குழு

- 07.06.2024- மறைமாவட்ட பொதுக்குழு கூட்டம் VSCS கட்டிடம் மார்த்தாண்டத்தில் வைத்து நடைபெற்றது. சிறப்பாக செயல்பட்டு வந்த அருள்பணி. S. ஷைன் அவர்களுக்கு நன்றியும், புதிதாக பணிப்பொறுப்பேற்கும் அருள்பணி. பெர்டின் அனஸ் அவர்களை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வும் நடைபெற்றது. 25 நபர்கள் கலந்துகொண்டார்கள்.

11. பொதுநிலையினர் பணிக்குழு

- 04.06.2024 - மறைமாவட்டதேர்தல்குழு கூட்டம் நடைபெற்றது.
- 07,21,25,28.06.2024 - ஆகிய நாட்களில் நிர்வாக குழு கூட்டங்கள் நடைபெற்றன.
- 11.06.2024- மேய்ப்புப்பணி பேரவை அமைப்புகள் கூட்டம் நடைபெற்றது.
- 28.06.2024 - மறைமாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.பணிக்குழுவின் புதிய செயலர் பொறுப்பேற்பு நிகழ்வு நடைபெற்றது.
- தேர்தல் முன்தயாரிப்பு மூன்று ஊர்களிலும், அன்பிய தேர்தல் ஏழு ஊர்களிலும், திருத்தூது கழக உறுப்பினர் தேர்தல் ஏழு ஊர்களிலும், நிர்வாக தேர்தல் ஆறு ஊர்களிலும் தேர்தல் பணிகள் செய்யப்பட்டது.

# 17. அருள்தந்தையர்களின் பணி நியமனம்

| No. | Name | Place |
|---|---|---|
| 1 | Fr. S. Xavier Benedict | Vicar General |
| 2 | Fr. G. Jeyakumar | Financial Administrator |
| 3 | Fr. A. Shebin | Secretary to the Bishop |
| 4 | Fr. G. Arockia Jose | Judicial Vicar and Parish Priest, Thickurichy |
| 5 | Fr. Antony M. Muthu | Chancellor and Correspondent of Child Jesus Matriculation School, Unnamalaikadai |
| 6 | Fr. J. Ajith | Financial Administrator of Child Jesus Matriculation School, Unnamalaikadai |
| 7 | Fr. N. Martin | Director of Pastoral Commissionsand Parish Priest, Puthukkadai |
| 8 | Fr. R. Isaac Raj | Parish Priest, Thirithuvapuram and Director of Priests' Personnel Board |
| 9 | Fr. M. David Michael | Vicar Forane of Mulagumoodu and Parish Priest, Kuzhivilai |
| 10 | Fr. E. Wiselin Xavier | Vicar Forane of Thirithuvapuram and Parish Priest, Palavilai |
| 11 | Fr. W. Sahaya Justus | Vicar Forane of Karencadu and Parish Priest, Elanthavilai |
| 12 | Fr. S. Maria Martin | Vicar Forane of Puthenkadai and Parish Priest, Manjakonam |
| 13 | Fr. F. Manohiam Xavier | Vicar Forance of Vencode and Parish Priest, Annainagar |
| 14 | Fr. A. Florence | Vicar Forane of Mathiravilai and Parish Priest, Chentharai |
| 15 | Fr. F. Sebastian | Parish Priest, CherukolKarumputhottam |
| 16 | Fr. D. Andrew | Parish Priest, Mukkalampadu |
| 17 | Fr. M. Callistus | Parish Priest, Mathiravilai |
| 18 | Fr. G. Justin Prabhu | Parish Priest, Packiapuram |
| 19 | Fr. S. Joseph Jeyaseelan | Parish Priest, Muttaicadu |
| 20 | Fr. S. Maria Rajendran | Parish Priest, Madathattuvilai |
| 21 | Fr. M. John Michael Raj | Parish Priest, Kadayal |
| 22 | Fr. A. Ajin Jose | Parish Priest, Kallaravilai |
| 23 | Fr. A. Amaladhas | Parish Priest, Murasancode |
| 24 | Fr. V. Benitto | Parish Priest, Kanjiracode |
| 25 | Fr. R. Arul | Parish Priest, Soosaipuram |
| 26 | Fr. L. JeganSilvester | Parish Priest, Kuttaicadu |
| 27 | Fr. G. Christuraj | Parish Priest, Fathimapuram |
| 28 | Fr. S. Shine | Parish Priest, Amsi |
| 29 | Fr. M. Godwin Sounder Raj | Parish Priest, Attoor and Correspondent of Trinity Central School, Chithrancode |
| 30 | Fr. V. Vanish Michael Raj | Parish Priest, Eanchacode and Financial Administrator of Trinity Central School, Chithrancode |

| | | |
|---|---|---|
| 31 | Fr. Wellington Sdc | Priest-in-charge, Parakuntu |
| 32 | Fr. A. DomiLililRaja | Parish Priest Mulavilai |
| 33 | Fr. Jees Raymond | Parish Priest, Kottoorkonam and Property-In-Charge |
| 34 | Fr. A. Pushparaj | Parish Priest, Nagacode |
| 35 | Fr. P. Augustine | Parish Priest, Irudhyapuram (T) and Project Officer |
| 36 | Fr. A. Leo Alex | Parish Priest, Yettacode |
| 37 | Fr. S. Xavier Sundar | Parish Priest, Kanjampuram |
| 38 | Fr. D. Benjamin | Parish Priest, Koottamavuand Managing Director of MulagumooduVicariate Catholic Nidhi Ltd., Thuckalay |
| 39 | Fr. M. Primas Singh | Parish Priest, Kulasekharam |
| 40 | Fr. Jones Cletus IVD | Parish Priest, Thumpali |
| 41 | Fr. BrightlinPalayan SAC | Parish Priest, Alencholai |
| 42 | Fr. M. Alwin Vijay | Parish Priest, Pilavilai |
| 43 | Fr. B. SarginRubas | Parish Priest, Manalikuzhivilai and Correspondent of Nanjil Catholic CBSE School, Vazhuthalampallam |
| 44 | Fr. G. Geo Giltus | Financial Administrator of NanjilCatholic CBSE School, Vazhuthalampallam |
| 45 | Fr. G. Robert John Kennedy | Managing Director of Nanjil Milk Plant, Mulagumoodu |
| 46 | Fr. M. Francis Xavier | Parish Priest, Thiruvithancodeand Assistant Managing Director of Nanjil Milk Plant, Mulagumoodu |
| 47 | Fr. N. John Benhar | Parish Priest, Kozhiporvilai and Financial Administrator of Nanjil Milk Plant, Mulagumoodu |
| 48 | Fr. A. Maria Vincent | Parish Priest, Kandanvilai |
| 49 | Fr. K. M. RomericThatheyus | Parish Priest, Appattuvilai (St. Antony) |
| 50 | Fr. L. Benny | Parish Priest, Arockiapuram |
| 51 | Fr. V. Gnanamuthu | Parish Priest, Manali |
| 52 | Fr. M. Maria William | Parish Priest, Kamplar and Director of PuthuVasantham |
| 53 | Fr. E. Albin Jose | Parish Priest, Valanoor |
| 54 | Fr. S. Jeyaprakash | Parish Priest, Munchirai |
| 55 | Fr. R. Xavier Bruce | Parish Priest, Appattuvilai (St. Joseph) |
| 56 | Fr. M. A. Michael Alocious | Parish Priest, Vellicode andCorrespondent of Pope John Paul II College of Education, Mulagumoodu |
| 57 | Fr. K. Shijin | Financial Administrator of Pope John Paul II College of Education, Mulagumoodu |
| 58 | Fr. V. Gilbert Lingson | Parish Priest, Mulagumoodu |
| 59 | Fr. M. Dominic KadatchaDhas | Corporate Manager and Parish Priest, Iruthayapuram (M) |
| 60 | Fr. A. Gelastin Gerald | Parish Priest, Melpalai |
| 61 | Fr. M. Peter | Parish Priest, Konamcadu |
| 62 | Fr. C. JeyaSundar Singh | Parish Priest, Themanoor |
| 63 | Fr. C. Steephen | Parish Priest, Paramanvilai and Correspondent of Nanjil Catholic College of Arts and Science, Kaliakkavilai |
| 64 | Fr. V. Vinso Antony | Parish Priest, Melpuram and Financial administrator of Nanjil CatholicCollege of Arts and Science, Kaliakkavilai |

| | | |
|---|---|---|
| 65 | Fr. M. Eckermens Michael | Parish Priest, Thundathuvilai and Director of Commission for Vocation |
| 66 | Fr. A. Bright SimsaRaj | Director of KIDSS-RMP |
| 67 | Fr. R. Maria Arputham | Parish Priest, Panavilai |
| 68 | Fr. George Ponnaiah | Parish Priest, Kalkurichy |
| 69 | Fr. V. Cyril Mesmin | Parish Priest, Vavarai |
| 70 | Fr. I. Antony Xavier | Parish Priest, Pacode |
| 71 | Fr. L. Aloysius | Parish Priest, Chemparuthivilai |
| 72 | Fr. Eugine Gomes Pocr | Priest-in-charge, Choozhal |
| 73 | Fr. Edward Royan OFM-CAP | Parish Priest, Lourdugiri |
| 74 | Fr. D. Sujin | Parish Priest, Karencadu |
| 75 | Fr. S. Francis | Priest-in-charge, Mathoor |
| 76 | Fr. Sahaya Jerald Abin MSFS | Priest-in-charge, Mankuzhy |
| 77 | Fr. P. SahayaDhas | Rector and Parish Priest, Vettuvenni and Managing Director of VSCS Nidhi Ltd., Marthandam |
| 78 | Fr. S. JesuRetnam | Rector and Parish Priest, Puliyoorkurichy |
| 79 | Fr. S. Sekhar Michael | Rector, Chunkankadai and Correspondent of Morning Star Polytechnic College, Chunkankadai |
| 80 | Fr. J. Maria AntoHalvin | Financial Administrator of Morning Star Polytechnic College, Chunkankadai |
| 81 | Fr. R. Paul Richard Joseph | Rector, Nattalam and Editor of PuthiyaThedal |
| 82 | Fr. R. Mary John | Co-Pastor, Vettuvenni |
| 83 | Fr. John BrittoGnanaprakasam SAC | Parish Priest, Pechiparai |
| 84 | Fr. Amal White Raja OFM-CAP | Co-Pastor, Lourdugiri |
| 85 | Fr. Dani John CMF | Co-Pastor, Cheruvalloor |
| 86 | Fr. B. Anish | Co-Pastor, Mulagumoodu |
| 87 | Fr. C. Jackson | Co-Pastor, Palliady |
| 88 | Fr. R.V. Arul Vineesh | Co-Pastor, Madathattuvilai |
| 89 | Fr. Biruthive Thomas | Co-Pastor, Kandanvilai |
| 90 | Fr. A. Ranjeeth | Co-Pastor, Murasancode |
| 91 | Fr. P. Anish | Co-Pastor, Mathiravilai |
| 92 | Fr. S. Vincent Raj | Co-Pastor, Mullanganavilai |
| 93 | Fr. Arul Tharsius SSS | Spiritual Director, Vettuvenni |
| 94 | Fr. M. Densingh | Confessor, Puliyoorkurichy |
| 95 | Fr. S. Godwin Selva Justus | Correspondent, St. Xavier's Catholic College of Engineering, Chunkankadai |
| 96 | Fr. R. Xavier Raj | Parish Priest, Konnakuzhivilaiand Financial Administrator of St. Xavier's Catholic College of Engineering, Chunkankadai |
| 97 | Fr. R. Joseph Stalin | Parish Priest, Vattam and Director of Hiltek |
| 98 | Fr. V. Dominic Savio | Correspondent of St. Xavier's Catholic College of Nursing and Financial Administrator of St. Xavier's Hospital, Chunkankadai |


| | | |
|---|---|---|
| 99 | Fr. M. Martin | Executive Director of KIDSS |
| 100 | Fr. R. Ajin | Financial Administrator of KIDSS |
| 101 | Fr. S.K. Jose Robinson | Director of Annai Ada Centre, Azhagiamandapam |
| 102 | Fr. V. Andrews | Parish Priest, Mullanganavilai and Assistant Director of AnnaiAda Centre, Azhagiamandapam |
| 103 | Fr. R. Suresh Raj | Parish Priest, Padarnilam and Financial Administrator of Annai Ada Centre, Azhagiamandapam |
| 104 | Fr. V. Victor | Higher Studies |
| 105 | Fr. Sunil K. | Secretary, Social Communication |
| 106 | Fr. Albin Jose E. | Secretary, Commission for Youth |
| 107 | Fr. Benitto V | Secretary, Bible, Catechism & Liturgy |
| 108 | Fr. Antony Xavier I. | Secretary, CRMI |
| 109 | Fr. Alwin Vijay M | Secretary, Basic Christian Communities |
| 110 | Fr. Sujin D. | Secretary, Christian Workers Movement |
| 111 | Fr. Maria Susai P. | Secretary, Dalit Movement |
| 112 | Fr. Arul R. | Secretary, Good News |
| 113 | Fr. BerdinAnas A. | Secretary, Prison Ministry |
| 114 | Fr. Christuraj G. | Secretary, CLC |
| 115 | Bro. S. Joseph Edwin | Secretary, Family Commission |
| 116 | Fr. Jeya Sunder Singh | Secretary, Ecumenism |
| 117 | Fr. Aloysius L. | Spiritual Director, Vincent De Paul Society |
| 118 | Fr. Maria Arputham | Director, Catholic SevaSangam |
| 119 | Fr. Shine S | Project Director, KIDSS-IFO |
| 120 | Fr. Jose Prasanth F. | Project Director, KIDSS-SHG |
| 121 | Fr. RomericThatheyus | Spiritual Director of Legion of Mary, Mulagumoodu Comitium |
| 122 | Fr. Isaac Raj R. | Spiritual Director of Legion of Mary, Thirithuvapuram Comitium |
| 123 | Fr. Charles Viju A. | Secretary, Health Commission |
| 124 | Fr. Maria Vincent A. | Secretary, Catholic Action |
| 125 | Mr. Merlin Jose M. | Secretary, Laity Commission |
| 126 | Fr. Dominic Savio V. | Project Director, KIDSS-CHDP |
| 127 | Mrs. Carmel Mary | Project Director, KIDSS-WSCP |
| 128 | Fr. Jerald Justin D. | Secretary, Interreligious Dialogue |
| 129 | Dn. K. Absalin MI | Deacon, Poottety |
| 130 | Mrs. Mary Angel Reeth | Secretary, Commission for Women |
| 131 | Fr. Antony Baskar HF | Priest-in-charge, Chetticharvilai |

# 18. ஆயரின் அலுவல்கள் – ஜூலை–2024

| Date | Time | Place | Event |
|---|---|---|---|
| 01 | 7.30 am | Chithirancode | Convent Blessing & Holy Mass at Trinity Central School |
| 03 | 6.00 pm | Aramannam | Feast mass |
| 06 -13 | 9.00 am | Velankanni | Annual Meeting – TNBC |
| 14 | 4.00 pm | Vavarai | Contact Visit – Confirmation & Feast Mass |
| 15 | 4.30 pm | Chunkankadai | Board Meeting at St. Xavier's Engineering College |
| 16 | 10.00 am | Parvathipuram | Meeting – Minority Federation |
| 17 | | Unnamalaikadai | Self Finance Teachers' Gathering |
| | 4.00 pm | Rajavoor | Carmel Father 100$^{th}$ Birthday Celebration & Holy Mass |
| 19 | 6.00 pm | Murasancode | Contact Visit & Feast Mass |
| 20 | 10.15 am | Thundathuvilai | Mathiravilai Vicariate Bible Commission Annual Day Celebration |
| 21 | 8.30 am | Thuckalay | Confirmation & Feast Mass – St. Elias Church |
| 25 | 7.30 am | Vaniakudy | Centenary Thanks giving Mass |
| 26 | 5.30 pm | Nagercoil | Holy Mass at St. Alphonsa Shrine |
| 28 | 9.30 am | Puthenkadai | Contact Visit & Feast Mass |
| 31 | 5.00 pm | Carmel School, Nagercoil | Feast Mass of St. Ignatius of Loyola |


குழித்துறை மறைமாவட்ட
புதிய தேடல் மலர் சிறக்க நல்வாழ்த்துகள்
தொடர்புக்கு
+91 9095066316
+91 9605020294
கிறிஸ்து அரசர் ஆலயம்
இருதயபுரம்
கிறிஸ்து அரசர்
சமூகநலக்கூடம்
நவீன சமயலறை, விசாலமான உணவறை,
வசதியான வரவேற்பறை மற்றும் பார்கிங் வசதி
உங்கள் வீட்டு அனைத்து நிகழ்வுகளுக்கும் அணுகுவீர்

Date of Publishing : **19-07-2024**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/ **2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office




Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Josaph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalai Kadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode